بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 35

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரபீயுல் அவ்வல் 04 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - ஸுஹூர் 28 ★ ஆகஸ்ட் 28 2025

## அல்லாஹ்வின் கட்டளை

وَمِنْهُمْ مَّنْ يَّقُوْلُ رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

**பொருள்**

**எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக! மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக)! எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக! என்று அவர்களுள் சிலர் வேண்டுகின்றனர்.**

**(அல்பக்கரா: 202)**

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஒவ்வொரு விஷயத்திற்கும் தூண் உள்ளது வாழ்க்கை மற்றும் ஆரோக்கியத்திற்கான தூண் என்பது இறையருளாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### ரமலான் நோன்பு

கூறினார்கள்: ரமலான் மாதம் அருளுக்குரிய மாதமாகும். துஆவிற்கான மாதமாகும். கூறினார்கள்: எனது நிலை என்னவென்றால், நான் மரணிப்பதற்கு அருகில் சென்றுவிடும்போதுதான் நோன்பை விடுகின்றேன். இயல்பு நோன்பை விட்டுவிடுவதை விரும்புவதில்லை. இவை அருளுக்குரிய நாட்களாகும். மேலும் அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணை இறங்குவதற்கான நாட்களாகும்.

### எளிமை

நினைவிற் கொள்ளுங்கள்! குழந்தைகளைப் போன்ற எளிமை உருவாகாத வரை மனிதனால் நபிமார்களின் வழியை மேற்கொள்ள முடியாது.

### வாழ்க்கைக்கான தூண்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சிறிது நோய்வாய்ப்பட்டார்கள். கூறினார்கள்: ஒவ்வொரு விஷயத்திற்கும் தூண் உள்ளது வாழ்க்கை மற்றும் ஆரோக்கியத்திற்கான தூண் என்பது இறையருளாகும். வெகு தொலைவிலிருந்து தங்களின் நூல்களுக்கான டிமாண்ட் வருவதாக பிரபலமான நூல் விற்பனையாளர்கள் கூறுகின்றனர் என ஒரு நபர் கூறினார். அதற்கு அன்னார் (அலை) கூறினார்கள்:அல்லாஹ் காற்றை வீசச் செய்துள்ளான். அதனால், மக்கள் தத்தமது இடத்தில் ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.( மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 83 - 84, காதியான் பதிப்பு 2018ம் ஆண்டு)

## மனிதன் எல்லா வகையான வீணான பணிகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும் இல்லையென்றால் அவனது ஆன்மிகப் பிறப்பு முழுமையடைய முடியாது

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல் முஃமினூனின் 13 முதல் 17 வரையிலான வசனங்களுக்கான விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எவ்வாறு இந்த ஏழு ஆன்மிகப் பிறப்பின் படித்தரங்கள் இருக்கின்னவோ அதே போன்று உங்களது பௌதீக பிறப்பிலும் பல்வேறு படித்தரங்கள் இருக்கின்றன. முதல் முதலில் நாம் மனிதனை களிமண்ணிலிருந்து படைத்தோம். அதாவது அதிலிருந்து வெளிப்படும் உணவின் மூலமாக. உதாரணமாக, தாவரங்கள், விலங்குகள் மற்றும் ஜடப் பொருட்கள் போன்றவை ஆகும். இதுவே ஆன்மிக உலகின் நிலையும் ஆகும். அதாவது எவ்வாறு உயிரணு பூமியிலிருந்து கிடைக்கும் இந்த உணவுகளின் விளைவால் உருவாகின்றதோ அதே போன்று ஆன்மிகத்தின் விதையும் மனிதனுள் உருக்கம் மற்றும் பணிவின் நிலை உருவாகாத வரை மேலும் ஆணவம் மற்றும் தற்பெருமையின் தன்மை அவனிடமிருந்து வெளியேறிவிடாத வரை உருவாக முடியாது. ஆக, அல்லாஹ் அதனை உயிரணுவாக மாற்றி தங்குகின்ற ஓரிடத்தில் வைத்து விடுகின்றான். அது பௌதீக பிறப்பின் இரண்டாம் படித்தரம் ஆகும். ஆன்மிக பிறப்பில் இதற்கெதிரில்

وَالَّذِيْنَ هُمْ عَنِ اللَّغْوِ مُعْرِضُوْنَ

என்ற நிலை வைக்கப்பட்டுள்ளது.

மேலும், எவ்வாறு உயிரணுவின் பாதுகாப்பிற்காக பல்வேறு வகையான எச்சரிக்கைகள் அவசியமானதாக இருக்கின்றதோ -இல்லையென்றால் எவ்வாறு அது வீணாகி விடுவதற்கான அபாயம் இருக்கின்றதோ அதே போன்று ஆன்மிகத்திற்கான விதையும் இந்த விஷயத்தை எதிர்பார்க்கின்றது. அதாவது, மனிதன் எல்லா வகையான வீணான பணிகளிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும்; இல்லையென்றால் அவனது ஆன்மிக பிறப்பு முழுமை அடைய முடியாது.

அடுத்து, மூன்றாவது படித்தரமாக இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது: அல்லாஹ் கூறுகின்றான்: அதாவது, நாம் உயிரணுவை ஒட்டுகின்ற ஒரு பொருளாக ஆக்கிவிடுகின்றோம். அதாவது அது ஓர் உறைந்த இரத்தக் கட்டியாக ஆகிவிடுகின்றது. ஆன்மிக படித்தரத்தில் இதற்கெதிரில் وَالَّذِيْنَ هُمْ لِلزَّكٰوةِ فٰعِلُوْنَ என்ற நிலை வைக்கப்பட்டுள்ளது. அதாவது எவ்வாறு உயிரணு ஒட்டுகின்ற பொருளாக ஆகிவிடுகின்றதோ மேலும் கருப்பையில் உறைந்து விடுகின்றதோ அதே போன்று ஆன்மிக முன்னேற்றம் அடையக் கூடிய மனிதரும் அப்படிப்பட்ட நிலையை அடைகின்றார். அதாவது மனித குலத்தின் நேசம் அவரது உள்ளத்தில் உருவாகிவிடுகின்றது. மேலும் அவர்

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம் ......

## நபிமொழி

### மூன்று நபர்களிடம் அல்லாஹ் பேச மாட்டான்

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மூன்று நபர்கள் இருக்கின்றனர். அவர்களிடம் அல்லாஹ் பேசவும் மாட்டான்; அவர்களை பார்க்கவும் மாட்டான்; மேலும், அவர்களுக்கு வேதனையளிக்கக் கூடிய தண்டனையையும் வழங்குவான்.

ஒருவர் யாரென்றால், எவரிடம் தேவைக்கு அதிகமாக தண்ணீர் இருந்தும் அவர் அதிலிருந்து பயணிகளை இழப்பிற்குரியவராக ஆக்கிவிடுபவர் ஆவார்.

மேலும், அந்த நபர். அதாவது எவரிடம் ஒருவர் பைஅத் செய்து விட்டு பின்னர் உலகத்திற்காக மட்டும் பைஅத் செய்தவர் ஆவார். அவர் எதனை விரும்புவாரோ அதனை அவருக்கு கொடுத்து விட்டால் அவர் நன்றியுடையவராக இருப்பார் ; இல்லையென்றால் நன்றியுடையவராக இருக்க மாட்டார். அடுத்து அந்த நபர்- அதாவது, எவர் அஸர் தொழுகைக்குப் பிறகு ஒரு நபரிடம் ஒரு பொருளைக் குறித்து விலை நிர்ணயித்து விட்டு, இந்தப் பொருள் இவ்வளவு விலைக்கு கிடைத்தது என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்பவர் ஆவார்; மேலும் அதனை விலைக்கு வாங்குபவர் அந்த விஷயத்தை உண்மை என கருதிவிடுவார்.

* * * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

:.போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஜல்ஸா ஸாலானா பிரிட்டன் - 2025**
**யூ.கே ஜல்ஸாவை முன்னிட்டு தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் விருந்தினர்களுக்கான பொன்னான அறிவுரைகள்**

விருந்தினர்களின் உள்ளமோ கண்ணாடியைப் போன்றதாகும். ஒரு கண்ணாடியைப் போன்று உடைந்து விடுகின்றது. எனவே அதற்கு பாதிப்பு ஏற்பட்டு அது உடைவதற்கு முன்னர் நீங்கள் அதன் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்யுங்கள்
(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

பாருங்கள்! ஏராளமான விருந்தினர்கள் வந்துள்ளனர். அவர்களில் சிலரை நீங்கள் அடையாளம் அறிந்திருப்பீர்கள்; சிலரை தெரிந்திருக்க மாட்டீர்கள். சிலரை அறிந்திருப்பீர்கள்; சிலரை அறிந்திருக்க மாட்டீர்கள். எனவே அனைவரையும் கண்ணியத்திற்குரியவர்களாக கருதி விருந்து உபசரிப்பு செய்வது உகந்ததாகும் -
(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

அனைவருமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்கள் ஆவர்; மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அழைத்ததால் ஜல்ஸா கேட்பதற்காக வந்துள்ளனர் என்பதை இன்றைய நாட்களில் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே அவர்களை கண்ணியப்படுத்துவதும், மரியாதை செலுத்துவதும், அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வதும், அவர்களின் தேவைகளை கருத்தில் கொள்வதும் அவசியமாகும்
இந்த நாட்களில் குறிப்பாக அன்பு,பொறுமை மற்றும் துஆவை கைகொள்ளுங்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 ஜூலை 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **வஃபா** மாதம் **25 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்று மாலையிலிருந்து இன்ஷா அல்லாஹ் பிரிட்டன் ஜல்ஸா ஸாலானாவின் நிகழ்ச்சிகள் முறையாக துவங்கும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளது போன்று, இந்த ஜல்ஸா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இதில் ஜமாஅத்தின் அறிவு, நல்லொழுக்கம் மற்றும் ஆன்மிக நிலையின் மேம்பாட்டிற்கான நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அல்லாஹ் கலந்து கொள்ளக் கூடிய அனைவருக்கும் இதிலிருந்து முழுமையாக பயன் பெறுவதற்கான நற்பேறை வழங்குவானாக! விருந்தினர்களுக்கு கண்ணியமும், மரியாதையும் செலுத்த வேண்டும் என்று இஸ்லாத்தில் மிகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இதனை மிகவும் வலியுறுத்தியுள்ளார்கள். விருந்தினர்களுக்கான ஆகுமான உரிமைகளை வழங்குங்கள் என்று அன்னார் (ஸல்) கூறியுள்ளார்கள். (முஸ்லிம், கிதாபுல் ஈமான்,ஹதீஸ் எண்: 47)

இந்த ஆகுமான உரிமை என்பது சில நிலைமைகளுக்கு ஏற்ப சில நாட்களுக்கான விருந்து உபசரிப்பு ஆகும். அன்னார் (ஸல்) இதே அறிவுரையின் தாக்கம் எப்படி இருந்தது என்றால், ஸஹாபிகள் தியாகங்கள் செய்தும் விருந்து உபசரிப்பு செய்து வந்தனர். அந்த நேரத்தில் துவக்க காலத்தில் ஸஹாபிகளின் நிலைமை செல்வச் செழிப்பானதாகவும், அவர்களுக்கு இரு வேளை உணவு கூட மிக எளிதாக கிடைக்கக் கூடியதாகவும் இருந்திருக்கவில்லை.

ஸஹாபிகள் தங்களுடைய மற்றும் தமது மனைவி, பிள்ளைகளுடைய உணவை குறைத்துக் கொண்டு தமது உரிமையை விட்டுக் கொடுத்து விருந்து உபசரிப்பு செய்து வந்தனர். மேலும், இது தொடர்பாக ஸஹாபியின் விருந்து உபசரிப்பு பற்றி ஒரு பிரபல்யமான அறிவிப்பு உள்ளது: ஒரு ஸஹாபியின் வீட்டிற்கு விருந்தாளி வந்தார். அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஸஹாபியுடன் அவரை அனுப்பியிருந்தார்கள். அன்னார் (ரலி) விசாரித்தபோது, வீட்டில் பிள்ளைகளுக்கு மட்டுமே சிறிதளவு உணவு உள்ளது என்று மனைவி கூனார். ஆனால், அவர்கள் விருந்து உபசரிப்பிற்காக பிள்ளைகளை ஏமாற்றி தூங்க வைத்து விட்டார்கள்.மேலும், வீட்டிற்கு விருந்தினரை அழைத்து வந்தார்கள். தாமும், விளக்கை அணைத்து விட்டு உணவு உண்ணவில்லை மாறாக, தாமும் உணவு உண்பது போன்று விருந்தினருக்கு முன்னால் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களும் பசியுடன் தூங்கி விட்டார்கள். மேலும், பிள்ளைகளும் பசியுடன் இருந்தனர். அல்லாஹ் மகிழ்ச்சியடைந்து இந்த செயலை இந்த அளவிற்கு பாராட்டினான். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் அதனைக் குறித்து தகவல் கொடுத்து விட்டான். அடுத்த நாள் அந்த ஸஹாபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானபோது, நீங்கள் இரவில் விருந்தினருக்கு உணவு அளித்தீர்களே! மேலும் உணவு அளிப்பதற்கு நீங்கள் மேற்கொண்ட செயல்திட்டத்தால் அல்லாஹ் மிகவும் மகிழ்சியடைந்தான்; மேலும், மிகவும் சிரித்தான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஆக, இதுவோ விருந்து உபசரிப்பு செய்பவரின் அந்தஸ்து ஆகும். (முஸ்லிம் ஹதீஸ் நூல், ஹதீஸ் எண்: 2054)

எனவே இன்றைய நாட்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜல்ஸா கேட்பதற்காக வருகை தந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு எல்லா வகையிலும் தொண்டாற்றுவதும், விருந்து உபசரிப்பு செய்வதும் ஒவ்வோர் ஊழியருக்கும், டியூட்டி கொடுக்கக் கூடிய ஒவ்வொருவருக்கும், ஒவ்வோர் அதிகாரிக்கும் கடமையாகும். அவர் எந்தத் துறையிலும் அல்லது நிர்வாகத்திலும் பணி செய்து கொண்டிருந்தாலும் சரியே!

இந்த நாட்களில் குறிப்பாக உழைப்பு, பொறுமை மற்றும் துஆவுடன் செயல்பட வேண்டும்.

விருந்தாளிகளின் தரப்பிலிருந்து ஒருவேளை ஏதாவது கடுமையாக கூற்றை கேட்க நேரிட்டாலும் கூட நீங்கள் உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக அதனை பொருட்படுத்தாதீர்கள். இங்கு பல்வேறு தரப்பட்ட துறைகள் இருக்கின்றன. நான் கடந்த குத்பாவிலும் சுருக்கமாக எடுத்துரைத்திருந்தேன். அதாவது ஒவ்வொரு துறையின் அதிகாரிகளும், அவர்களுடைய உதவியாளர்களும் தத்தமது கடமைகளை அழகிய முறையிலும், இனிய குணத்துடனும் நிறைவேற்றுங்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எண்ணற்ற சம்பவங்களும் இருக்கின்றன. விருந்தாளிகளுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள் என்று அன்னார் (அலை) குறிப்பாக வழிகாட்டல் வழங்கி வந்தார்கள். அன்னாருடைய வழிகாட்டல்கள், சம்பவங்கள் மற்றும் அன்னாரின் வாழ்க்கை வரலாற்று நூல்களில் பல்வேறு அம்சங்களில் மற்றும் பல்வேறு இடங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அஸாமில் இருந்து வந்திருந்த விருந்தினர்களுக்கான விருந்து உபசரிப்பு தொடர்பாகவும் ஒரு பிரபல்யமான சம்பவம் இருக்கின்றது: அதாவது அன்னார் (அலை) எவ்வாறு அவர்களுக்காக விருந்து உபசரிப்பு செய்தார்கள்?
இந்த சம்பவத்தை நாம் கேட்கின்றோம்; மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை)

அவர்கள் அந்த விருந்தினர்களை கருத்தில் கொண்டார்கள் என்பதை அறிந்து அதனால் நாம் கலங்குகின்றோம். ஆனால், இது டியூட்டி கொடுக்கக் கூடிய அனைவருக்கும், மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்காக தாமாகவே தம்மை முன் நிறுத்தியுள்ள அந்த அனைத்து மக்களுக்கும் ஒரு படிப்பினையாகும்.

சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: அதாவது, ஒருமுறை அஸ்ஸாமிலிருந்து சில விருந்தினர்கள் வந்தனர். மேலும், லங்கர் கானாவில் தமது சவாரியில் வந்து இறங்கினர். மேலும், பொருட்களை இறக்கி வையுங்கள் என்று அங்கு இருந்தவரிடம் கூறினார்கள். அங்கு இருந்த லங்கர் கானா ஊழியரின் நடத்தை உகந்ததாக இருக்கவில்லை. அதன் காரணமாக, அவர்கள் அதிருப்தி அடைந்து விட்டனர். மேலும், எந்த குதிரை வண்டியில் அவர்கள் வந்திருந்தனரோ அதே வண்டியில் அமர்ந்து திரும்பிச் செல்ல புறப்பட்டு விட்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இது தொடர்பாக தெரிய வந்தபோது, விருந்தினர் கோபமடைந்து செல்லும் நிலைமை ஏன் ஏற்பட்டது? என்று அன்னார் (அலை) மிகவும் அதிருப்தியடைந்தார்கள். அன்னார் (அலை) உடனடியாக வீட்டை விட்டு எந்த நிலையில் புறப்பட்டார்கள் என்றால், அவசரத்தில் காலணியை சரியாக அணிவதும் கூட கடினமாக இருந்தது. மேலும் அவர்களுக்குப் பின்னால் வேக வேகமாக நடந்து சென்றார்கள். விருந்தினர்களோ குதிரை வண்டியில் சவாரி செய்து கொண்டிருந்தார்கள். விருந்தினர்கள் சென்ற வண்டி குதிரை வண்டி என்றழைக்கப்படுகிறது. மேலும் அவர்கள் அதிக தூரம் சென்று விட்டிருந்தனர். ஆனால், அன்னார் (அலை) நடந்தே அதி விரைவாக சென்று அவர்களுக்குப் பின்னால் சென்றனர். அறிவிப்பில் வருகின்றது: காதியானுக்கு அருகில் ஓடக் கூடிய நதியில் அன்னார் (அலை) அந்த மக்களை அடைந்து விட்டார்கள்.பின்னர் அன்னார் (அலை) அந்த விருந்தினர்களை திரும்ப அழைத்துச் சென்றார்கள். அன்னார் (அலை) எந்த தொனியில் அவர்களை திரும்ப அழைத்து வந்தார்களோ அதுவும் கூட விருந்தினர்களுக்கான கண்ணியம் மற்றும் மரியாதையின் வியக்கத்தக்க வெளிப்பாடாக இருந்தது.

அன்னார் (அலை) விருந்தினர்களிடம், நீங்கள் உங்களது வண்டியில் அமர்ந்திருங்கள்; குதிரை வண்டியில் அமர்ந்திருங்கள்; மேலும் நான் நடந்தே தங்களுடன் செல்வேன். எவ்வாறிருப்பினும், அன்னாருடைய இந்த நல்லொழுக்கத்தைக் கண்டு விருந்தினர்களும் வெட்கத்திற்குள்ளாகினர். மேலும், எங்களால் குதிரையில் அமர்ந்து பயணிக்க முடியாது; நாங்களும் தங்களுடன் நடந்தே வருவோம் என்று அவர்கள் கூறினர். ஹுஸுர்! நாங்கள் அமர மாட்டோம் ; நாங்கள் தங்களுடனேயே வருவோம் என்று மீண்டும், மீண்டும் கூறிக் கொண்டிருந்தனர்.

எவ்வாறிருப்பினும், காதியான் திரும்பி வந்து விட்டனர். லங்கர் கானாவில் வந்தடைந்தபோது, அன்னார் (அலை) விருந்தினர்களின் பொருட்களை தாமே இறக்கி வைப்பதற்கு கரங்களை நீட்டினார்கள். ஆனால், ஊழியர்களும் தங்களுடைய தவறை உணர்ந்திருந்தனர். மேலும், அவர்கள் மிக அதிகமாக வெட்கத்திற்குள்ளாகியிருந்தனர். எனவே அவர்கள் உடனடியாக முன்னால் சென்று விருந்தினர்களின் பொருட்களை இறக்கி வைக்கத் துவங்கிவிட்டனர். பின்னர் அந்த மக்களின் உணவு தொடர்பாக விசாரித்தார்கள். ஏனெனில், அவர்கள் அஸாமைச் சேர்ந்த மக்களாக இருந்தனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களுக்காக சிறப்பான உணவிற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் ஸீரத்துல் மஹ்தி என்ற நூல், தொகுதி5, பக்கம் 57- 58)

இவ்வாறு விருந்தினர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்யுங்கள் என்ற லங்கர்கானா தொடர்பான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வழிகாட்டலை இங்கு நான் விளக்கி விடுகின்றேன். அதாவது ஜல்ஸா ஸாலானாவின் போது ஒரே போன்ற உணவு சமைக்கப்பட வேண்டும். மேலும் அது விருந்தினர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற இந்த வழிகாட்டலும் உள்ளது. ஏனெனில், அந்த மக்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். எனவே பல்வேறு வகையான ஏற்பாடு கடினமாகும். (ஹஸ்ரத் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல் ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பக்கம் 149)

இதே போன்ற விருந்து உபசரிப்பிற்கான மற்றோர் உதாரணத்தை ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மது ஸாதிக் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

கூறுகின்றார்கள்: எனக்கு நினைவு இருக்கின்றது. ஒருமுறை நான் லாஹூரிலிருந்து காதியான் வந்திருந்தேன். அநேகமாக, 1897 அல்லது 1898-ம் ஆண்டு நிகழ்ந்த சம்பவமாகும்.என்னை ஹஸ்ரத் ஸாஹிப் மஸ்ஜித் முபாரக்கில் அமர்த்தினார்கள். அது அக்காலத்தில் ஒரு சிறிய இடமாக இருந்தது. பின்னர் அதன் Extension நிகழ்ந்ததால் மஸ்ஜித் சற்று பெரியதாகி விட்டது. அது விரிவாக்கம் செய்யப்பட்டது. அன்னார்(அலை) கூறினார்கள்:

நீங்கள் இங்கு அமருங்கள்; நான் உங்களுக்கு உணவு கொண்டு வருகின்றேன்.

இவ்வாறு கூறிவிட்டு அன்னார் (அலை) உள்ளே சென்று விட்டார்கள். முஃப்தீ ஸாஹிப் கூறுகின்றார்கள்:

அன்னார் (அலை) ஓர் ஊழியரின் கைகளில் உணவை அனுப்புவார்கள் என்பது எனது எண்ணமாக இருந்தது. ஆனால், சில நிமிடங்களுக்குப் பிறகு, ஜன்னல் திறந்தது. அந்த ஜன்னல் மஸ்ஜித் மற்றும் அன்னாரின் வீட்டிற்கு மத்தியில் இருந்த சுவரில் இருந்தது. ஜன்னலைப் போன்ற ஒரு சிறிய வாசலும் இருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் என்ன பார்க்கின்றேன் என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது சொந்த கைகளில் உணவுத் தட்டை அல்லது டிரேயை எடுத்துக் கொண்டு எனக்காக உணவு கொண்டு வந்திருக்கின்றார்கள். நீங்கள் உணவு சாப்பிடுங்கள் ; நான் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருகின்றேன் என்று என்னைப் பார்த்து கூறினார்கள். கூறுகின்றார்கள்:

அந்த நேரத்தில் நான் மெய்மறந்து உருக்கத்தால் எனது கண்ணீர் வழிந்தது. அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமது தலைவராகவும், வழிகாட்டியாகவும் இருந்து கொண்டு நமக்காக இந்த தொண்டை ஆற்றினார்கள் எனும்போது நாம் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு எந்த அளவிற்கு தொண்டாற்ற வேண்டும்! (முஃப்தீ முஹம்மது ஸாதிக் ஸாஹிப் அவர்களின் நூல், திக்ரே ஹபீப், பக்கம் 327)

இது ஒரு முன்மாதிரியாக இருந்தது. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்வில் நமக்கு விருந்து உபசரிப்பிற்கான இதுபோன்ற ஏராளமான சம்பவங்கள் கிடைக்கின்றன. அன்னார் (அலை) ஒருமுறை மக்களிடம் கூறினார்கள்:

எந்தவொரு விருந்தினருக்கும் எந்த துன்பமும் ஏற்பட்டு விடக் கூடாது என்று எனக்கு எப்போதும் எண்ணம் இருந்து வருகின்றது. இன்னும் கூறப்போனால், இதனால்தான் இயன்ற வரை விருந்தினர்களுக்கு வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் எப்போதும் வலியுறுத்தி வருகின்றேன். விருந்தினர்களின் இதயம் கண்ணாடியைப் போன்று மிருதுவானதாக இருக்கின்றது. மேலும், சிறிய அளவில் பாதிப்பு ஏற்பட்டாலும் உள்ளம் உடைந்து விடுகின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 111, 2022-ம் ஆண்டு பதிப்பு)

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்:

குறிப்பாக நான் தற்போது அஸ்ஸாம் மக்களின் உதாரணத்தை வழங்கியதைப் போன்று சில விருந்தினர்கள் மிகவும் உணர்வுப்பூர்வமானவர்களாக இருக்கின்றனர். பல்வேறு சமுதாயங்களுக்கு அவரவருக்கென வழிமுறைகளும், நிலைமைகளும் இருக்கின்றன. சிலர் மிக விரைவாக உணர்ச்சிவசப்பட்டு விடுகின்றனர். கோபப்பட்டு விடுகின்றனர். எனவே அன்னார் (அலை) கூறினார்கள்:

அவர்கள் ஏன் உணர்ச்சிவசப்பட்டார்கள்? மேலும் அவர்கள் ஏன் கோபப்பட்டார்கள்? என்று நீங்கள் கருதாதீர்கள்! விருந்தினர்களின் உள்ளமோ கண்ணாடியைப் போன்றதாகும். ஒரு கண்ணாடியைப் போன்று உடைந்து விடுகின்றது. எனவே அதற்கு பாதிப்பு ஏற்பட்டு அது உடைவதற்கு முன்னர் நீங்கள் அதன் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்யுங்கள்.

எனவே இது யாருடைய முன்மாதிரி மற்றும் அறிவுரை என்றால், இதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது எஜமானார் மற்றும் தலைவரை பின்பற்றியவாறு விருந்தினர்களின் விருந்து உபசரிப்பிற்காக நமக்கு வழங்கியுள்ளார்கள்.

ஒரு சம்பவம் எடுத்துரைக்கப்படுகின்றது: அதாவது ஒருமுறை ஏராளமான விருந்தினர்கள் வந்திருந்தனர். அன்னார் (அலை) (விருந்தினர் இல்லம் எனும்) லங்கர் கானாவின் இன்சார்ஜ் மியான் நஜ்முத்தீன் அவர்களிடம் கூறினார்கள்:

பாருங்கள்! ஏராளமான விருந்தினர்கள் வந்துள்ளனர். அவர்களில் சிலரை நீங்கள் அடையாளம் அறிந்திருப்பீர்கள்; சிலரை அறிந்திருக்க மாட்டீர்கள். சிலரை அறிந்திருப்பீர்கள்; சிலரை அறிந்திருக்க மாட்டீர்கள். எனவே அனைவரையும் கண்ணியத்திற்குரியவர்களாக கருதி விருந்து உபசரிப்பு செய்வது உகந்ததாகும். (மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 2022)

அனைவருக்கும்

கண்ணியமளிப்பதும், மரியாதை செலுத்துவதும் அவசியமாகும். ஒருவர் ஏழையா? அல்லது செல்வந்தரா? என்று பார்க்கக் கூடாது. ஒருவர் அமெரிக்காவிலிருந்து வந்துள்ளாரா? அல்லது ஒருவர் பாகிஸ்தானிலிருந்து வந்துள்ளாரா? ஒருவர் ஆஃப்ரிக்காவிலிருந்து வந்துள்ளாரா? அல்லது வேறொரு நாட்டிலிருந்தா? அல்லது இங்கேயே வசிக்கக் கூடியவரா? என்று பார்க்கக் கூடாது. அனைவருமே விருந்தினர்கள் ஆவர்; மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அழைத்ததால் ஜல்ஸா கேட்பதற்காக வந்துள்ளனர் என்பதை இன்றைய நாட்களில் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே அவர்களை கண்ணியப்படுத்துவதும், மரியாதை செலுத்துவதும், அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வதும், அவர்களின் தேவைகளை கருத்தில் கொள்வதும் அவசியமாகும்.

ஆக, அன்னார் (அலை) விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்கு எவ்வாறு அறிவுரை வழங்கியுள்ளார்கள்? என்று பாருங்கள். மேலும் அன்னார் (அலை) தமது ஊழியர்களிடம் இவ்வாறும் கூறினார்கள்:

அதாவது நீங்கள் விருந்தினர்களுக்கு சரியான முறையில் விருந்து உபசரிப்பு செய்வீர்கள் ; மேலும் அவர்களுக்கு தொண்டாற்றிக் கொண்டிருப்பீர்கள் என்று எனக்கு உங்கள் மீது நல்லெண்ணம் உள்ளது.

எனவே ஒவ்வோர் ஊழியரும் எப்போதும் இதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதாவது, எந்த இடத்திலும், எந்த துறையிலும் அவரது டியூட்டி இருந்தாலும் அங்கு அவர் விருந்து உபசரிப்பிற்கான கடமையை செலுத்துவதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். அளவு வழங்கும் கூடாரத்தில் இருந்தாலும் சரியே! அல்லது மற்ற இடங்களில் இருந்தாலும் சரியே! நான் முன்னர் குறிப்பிட்டது போன்று அவர்கள் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். பல்வேறு துறைகள் இருக்கின்றன. டிக்கட் எடுக்கும் பணியிலிருந்து மாநாட்டுத் திடல் வரை வருவதற்கான எத்தனை துறைகள் இருக்கின்றனவோ அவற்றில் விருந்தினர்களுக்கு ஊழியர்களுடன் தொடர்பு ஏற்படுகின்றது. அங்கு ஒவ்வோர் ஊழியரும் தமது நற்குணம் மற்றும் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். உணவு சமைக்கும் துறை மற்றும் உணவு பரிமாறும் துறை இருக்கின்றது. இந்தத் துறைகளும் விருந்தினர்களுக்கான உரிமையை செலுத்த வேண்டும். ஏனெனில், இது விருந்து உபசரிப்பிற்கான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாகும். எனவே இதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதாவது ஒன்று, விருந்தினர்களுக்கு வயிறு நிரம்ப உணவு வழங்கப்பட வேண்டும்; மேலும், கண்ணியத்துடன் உணவு வழங்க வேண்டும்.லங்கர் கானாவில் பணி செய்யக் கூடியவர்கள் நல்ல உணவு சமைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும், அல்லாஹ்வின் அருளால் அவர்கள் முயற்சியும் செய்கின்றார்கள். மேலும், தேவைக்கு ஏற்ப உணவு கிடைப்பதையும், பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

தூய்மை மற்றும் துப்பரவு துறைகளில் முழுமையான கவனம் செலுத்த வேண்டும். சுத்தமும் ஈமானின் அம்சமாகும்.அது சாதாரண விஷயம் ஒன்றும் கிடையாது. தூய்மை ஈமானின் பகுதியாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் ஹதீஸ், கிதாபுத் தஹாரா, ஹதீஸ் 223)

எனவே இதன் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். இந்த விஷயத்தில் சுற்றுப்புறத்தின் தூய்மையும் அடங்கும்.மேலும் நமது மற்ற ஏற்பாடுகள் இருக்கின்றன. குளியலறைகள் போன்றவை இருக்கின்றன. அவற்றின் சுத்தமும் அடங்கும்.

மாநாட்டுத் திடலில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக மக்களை அழைத்து வருகின்ற ஊழியர்கள் இருக்கின்றனர். அவர்கள் மென்மை மற்றும் அன்புடன் கவனமூட்டுங்கள். சில மக்களுக்கு சரியான புரிதல் இருக்காது. அவர்கள் முழுமையாக ஜல்ஸா கேட்பதில்லை. இங்கு அமர்ந்திருக்கக் கூடியவர்கள் டீஸிப்ளின் கொண்டவர்கள் ஆவர். நீங்கள் ஆண்கள் திடலிலும், பெண்கள் திடலிலும் அவர்களுக்கு மென்மை மற்றும் நேசத்துடன் புரியவைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். தர்பிய்யத் துறையும் இதற்காக பணி செய்து கொண்டிருக்கின்றது. அதாவது மக்களை ஜல்ஸா திடலில் அமர்த்தி ஜல்ஸாவை கேட்கச் செய்ய வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அந்த நேரம் கடை வீதிகளும் அடைக்கப்பட்டிருக்கும். அடைக்கப்பட்டிருக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும், ஒவ்வோர் இடத்திலும் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, ஊழியர்கள் இந்த நாட்களில் நற்குணத்திற்கான ஒரு சிறப்பான முன்மாதிரியை காட்ட வேண்டும். மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கொண்டுள்ள நல்லெண்ணத்தை பூர்த்தி செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இதே போன்று,நான் விருந்தினர்கள் தொடர்பாக சில விஷயங்களையும் கூற விரும்புகின்றேன். இங்கு ஜமாஅத்தைச் சாராத சில விருந்தினர்களும் இங்கு வருகின்றனர். ஆனால், அவர்களுக்கோ ஒரு சிறப்புத் துறை தனியாக நிறுவப்பட்டுள்ளது. மேலும், அவர்களுக்கு சிறப்பான விருந்து உபசரிப்பு செய்யப்படுகின்றது. ஏனெனில் இவர்கள் அந்நியர்கள் ஆவர். ஆயினும், இந்த ஒரு சிலரைத் தவிர அனைத்து விருந்தினர்களின் பெரும்பான்மை என்பது அது அஹ்மதி உறுப்பினர்களுடையதாகும்.

நீங்கள் இங்கு ஜல்ஸா கேட்பதற்காக வந்துள்ளீர்கள். எனவே ஏற்பாடு உங்களுக்கு சரியானதாக இருக்கின்றதா? இல்லையா? என்ற விஷயத்திற்கு நீங்கள் முக்கியத்துவம் அளிக்காதீர்கள். உங்களுக்கு சரியான விருந்து உபசரிப்பு செய்யப்பட்டிருந்தாலும் செய்யப்படாவிட்டாலும் அல்லது ஏதாவது ஓர் ஊழியர் ஒரு (தகாத) நடத்தையை மேற்கொண்டு விட்டாலும் அதற்கு முக்கியத்தும் அளிக்காதீர்கள். அசல் நோக்கமோ ஆன்மிக உணவை பெற வேண்டும். மேலும், நீங்கள் இதற்காகவே முயற்சி செய்ய வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியிருப்பது போன்று, விருந்து உபசரிப்பு செய்யக் கூடியவர்கள் விருந்து உபசரிப்பிற்கான உரிமையை செலுத்த வேண்டும் ; அவர்கள் செலுத்துகின்றார்கள். ஆனால், இதே போன்று கலந்து கொள்ளக் கூடியவர்களுக்கும் இந்த பொறுப்பு உள்ளது. அதாவது, ஊழியர்களிடம் ஏதாவது பலவீனங்கள் அல்லது தவறுகள் அல்லது ஏதாவது குறைகள் ஏற்பட்டு விட்டால் அவற்றை புறந்தள்ளிவிடுங்கள்.

அவர்களில் எவர்கள் துப்புரவுத் துறையில் பணி செய்கின்றார்களோ அவர்கள் ஒன்றும் பயிற்சி பெற்ற நபர்கள் கிடையாது; அல்லது டீஸிப்ளின் துறையில் பணி செய்யக் கூடியவர்கள் ஒன்றும் காவல்துறை ஊழியர்கள் கிடையாது அல்லது கேட்டில் டியூட்டி கொடுக்கக் கூடியவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் பயிற்சி பெற்றவர்கள் ஒன்றும் கிடையாது அல்லது போக்குவரத்து கட்டுப்பாட்டுத் துறையில் பணி செய்யக் கூடியவர்கள் இருக்கின்றனர். அவர்களும் ஒன்றும் பயிற்சி பெற்ற போக்குவரத்து காவலர்கள் கிடையாது. அவர்கள் டிராஃபிக் கன்ட்ரோல் செய்து வருகின்றனர். இந்த அனைத்து நபர்களும் தன்னார்வலர்கள் ஆவர். விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்காக தங்களைத் தாமாகவே அவர்கள் முன்நிறுத்தியுள்ளனர். அவர்களில் சிலர் மேல்நிலைப் பள்ளி பிள்ளைகள் ஆவர். சிலர் பல்கலைகழகங்களின் இளம் மாணவர்கள் ஆவர். சிலர் மற்ற தொழில்களுடன் தொடர்பு கொண்டுள்ள நபர்கள் ஆவர். மேலும், மிகவும் நல்ல பணிகளில் வேலை செய்யக் கூடிய மற்றும் நல்ல அந்தஸ்தில் இருக்கக் கூடியவர்கள் ஆவர். நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என இவர்கள் அனைவரும் ஓர் உணர்வுடன் தொண்டாற்றுகின்றனர். எனவே இவர்களின் உணர்வை பாராட்டியாவது அவர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்குங்கள். மேலும், அவர்களின் பலவீனங்களை பொருட்படுத்தாதீர்கள். நீங்கள் அவ்வாறு செய்யும்போது நீங்கள் இங்கு எந்த நோக்கத்திற்காக வந்துள்ளீர்களோ அந்த நோக்கத்தை பெற்றுக் கொள்வீர்கள்; மேலும், அந்த நோக்கத்தை பெறக் கூடியவர்களாகவும் இருப்பீர்கள். மேலும் இதனால் பரஸ்பர தொடர்புகளில் கூடுதல் வலிமையும் பிறந்து விடும். எல்லா விருந்தினர்களும் தாம் இங்கு வந்துள்ளதன் நோக்கம் என்ன? என்பதை அனைத்து விருந்தினர்களும் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் அந்த உயரிய நோக்கம் உயர் நல்லொழுக்கம் மற்றும் அல்லாஹ்வை நினைவு கூர்வதனால் மட்டுமே நிறைவு செய்ய முடியும்.

உணவு அருந்தும் கூடாரத்தில் ஒவ்வொரு விருந்தினரின் கடமை என்னவென்றால், உணவு உண்ட பிறகு விரைவாக கூடாரத்தை காலி செய்து விட வேண்டும். ஏனெனில் அப்போதுதான் மற்ற மக்களும் அங்கு வந்து உணவு உண்ண முடியும். சிலமுறை இடம் பற்றாக்குறை இருக்கின்றது; விருந்தினர்களோ அதிகமாக இருக்கின்றனர். அதன் காரணமாக வரிசை கிரமத்தில் அல்லது ஷிஃப்ட்படி உணவு பரிமாற வேண்டியது ஏற்படுகின்றது.

ஆக, இந்த விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள். அதாவது, உணவு உண்ட பிறகு, உடனடியாக உணவு கூடாரத்தை விட்டு வெளியேறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அவ்வாறல்லாமல், அங்கேயே நின்று கொண்டு உரையாடல் அல்லது பேச்சுகளில் நேரத்தை செலவிடாதீர்கள். பேச வேண்டும் என்றால், வெளியில் சென்று பேசுங்கள்; உங்களது நேரத்தை கழியுங்கள். இதே போன்று ஊழியர்கள் தட்டுகளில் உணவு பரிமாறுகின்றனர். நீங்கள் கேட்டுக் கொண்டால்,அவர்களுக்கு கூறப்பட்டிருப்பது போன்று அவர்கள் உங்களுக்கு உணவு பரிமாறிவிடுவார்கள். உங்களது கோரிக்கைக்கு ஏற்ப கொடுத்து விடுவார்கள். எனினும், விருந்து வீணாகி விடக் கூடாது.

உணவை எப்போதும் மதிக்க வேண்டும். சில நபர்கள் சிறிதளவு ரொட்டி கருகிவிட்டாலோ அல்லது வேகாமல் இருந்தாலோ பின்னர் அதனை பிய்த்து எடுத்து வீசிவிடுகின்றனர். அது உண்பதற்கு தகுதியானதென்றால் அதனை உண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒருவர் மிகவும் நோயாளியாக இருக்கின்றார் மேலும் அவருக்கு அது துன்பத்திற்கு காரணியாக இருக்கும் என்ற நிலையைத் தவிர எதையும் வீணாக்கக் கூடாது. பொதுவாகவே ரொட்டி இயந்திரங்களில் நன்றாக சமைக்கப்பட்டே வருகின்றது. நான் ஆய்வும் செய்துள்ளேன். எனினும், சிலமுறை சில கரிந்த ரொட்டிகளும் வந்து விடுகின்றன. ரொட்டி மிக அதிகமாக கரிந்து போயிருந்தால் அல்லது நன்றாக சமைக்கப்படாமல் இருந்தால் தவிர மற்ற நிலைகளில் அதனை வீணாக்குவதிலிருந்து நீங்கள் தவிர்ந்து கொள்ள வேண்டும். இதே போன்று குழம்பை வீணாக்குவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள்; ஒன்று, அவ்வாறு செய்வது உணவை வீணடிப்பது ஆகும். அது செய்யப்படக் கூடாது. இரண்டாவதாக, அதே உணவு வேறு ஒருவருக்கு பயன்படக் கூடும்.

அடுத்து, இந்த விவகாரமும் உருவாகிவிடுகின்றது. அதாவது உணவானது தட்டுகளில் மிக அதிகமாக எஞ்சிவிடுகின்றது. பின்னர் அது குப்பைத் தொட்டிகளில் வீசப்படுகின்றது. அதனை அப்புறப்படுத்துவது கடினமாகி விடுகின்றது. அதன் காரணமாக துப்புரவுத் துறைக்கு பெரும் சுமையை சுமக்க நேரிடுகின்றது. மேலும் அவர்களுக்கு மிக அதிகமாக பணி செய்ய நேரிடுகின்றது. எனவே விருந்தினர்கள் ஜல்ஸா ஸாலானாவின் நாட்களில் உணவை பரக்கத்தாக கருதி உண்ணுங்கள். மேலும் அதனை வீணாக்காதீர்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்மாதிரி இவ்வாறாக இருந்தது. ஒருமுறை அன்னாருக்கு உணவிற்கான ஏற்பாடு செய்ய முடியாமல் போனது. மேலும் நிர்வாகிகள் மறந்து விட்டனர். மேலும் அன்னாரும் பணியில் மும்முரமாகிவிட்டார்கள். உணவு தொடர்பாக அன்னார் (அலை) கேட்டபோது அனைவரும் கவலையடைந்து விட்டனர். உணவு தீர்ந்து போயிருந்தது. அப்போது, அன்னார் (அலை) கூறினார்கள்:

பிரச்சனை ஒன்றும் இல்லை ; மக்கள் எங்கு அமர்ந்து உணவு அருந்தினார்களோ அங்கு அந்த உணவு மேஜையில் ரொட்டியின் எஞ்சியிருக்கும் ரொட்டித் துண்டுகளும், குழம்பும் இருந்தால் அதனையே எடுத்துக் கொண்டு வாருங்கள்; நான் அதனையே உண்டு கொள்கிறேன்.

ஆக, அன்னார் (அலை) மக்கள் விட்டுச் சென்ற அந்த சிறிய ரொட்டித் துண்டுகளையே உண்டார்கள்.

(ஹஸ்ரத் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ(ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பக்கம் 322)

இது அன்னார் நமக்காக நிலைநாட்டிய அன்னாருடைய அழகிய முன்மாதிரியாகும். எனவே எப்போதும் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ளுங்கள். அதாவது நாம் உணவை வீணாக்குவதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். மேலும், இதே போன்று, (மாநாடு முடிந்த பிறகு) பணியை நிறைவு செய்பவர்களின் பணியையும் எளிதாக்க வேண்டும். (ஸுனன் திர்மிதி, ஹதீஸ் எண்: 1803)

உணவிற்கு மதிப்பளித்தவாறு அதனை உண்ணுங்கள். எது கொடுக்கப்படுமோ அதனை மகிழ்ச்சியாக உண்ணுங்கள். நிச்சயமாக அன்னாருடைய இந்தக் கூற்று என்பது விருந்தினர்களுக்கு சிறப்பாக கூறப்பட்டதாகும். எனவே அது இதன்படி அமல் செய்யக் கூடிய விருந்தினர்கள் மற்றும் தங்களுடன் அருளை கொண்டு வரக் கூடிய விருந்தினர்களுக்கானதாகும். ஆனால், அதனை நிரூபணம் செய்வதற்கு ஒவ்வொரு விருந்தினரும் அதற்கான முன்மாதிரியாக ஆக வேண்டும்.

அருள்களை கொண்டு வரக் கூடிய அந்த விருந்தினர்களாக ஆகுங்கள். மேலும், வீட்டினரின் துன்பத்திற்கு காரணியாக இருக்கக் கூடிய அந்த விருந்தினராக ஆகாதீர்கள்.மாறாக, துன்பங்களை அகற்றக் கூடியர்களாக இருக்க வேண்டும்.

நாம் இங்கு வந்திருக்கின்றோம் என்றால், ஜல்ஸாவின் கீழ் ஒரு ஏற்பாடு உள்ளது. மேலும் டியூட்டி கொடுக்கக் கூடியவர்கள் டியூட்டி கொடுக்கின்றார்கள். ஆயினும், கலந்து கொள்ளக் கூடியவர்களும்,பணி செய்யக் கூடியவர்களும் அனைவரும் அஹ்மதிகள் ஆவர். நம் அனைவரின் நோக்கமும் ஒன்றாகும். அதாவது நாம் இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் போதனை மற்றும் இஸ்லாமிய போதனைக்கு ஏற்ப நமது நல்லொழுக்க, ஆன்மிக மற்றும் அறிவார்ந்த சீர்திருத்தத்தை செய்ய வேண்டும் என்பதாகும்.

அவர் டியூட்டி கொடுக்கக் கூடியவராக இருக்கட்டும் அல்லது விருந்தினராக இருக்கட்டும். அனைவருடைய பணி இதுவே ஆகும். அதாவது அவர்கள் இதற்காக முயற்சி செய்யட்டும். சிலமுறை எப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகிவிடுகின்றன என்றால், உணவில் குறைபாடு ஏற்பட்டு விடுகின்றது. உணவில் எவ்வகையான குறைவும் ஏற்படக் கூடாது என்பதே ஊழியர்கள் மற்றும் லங்கர் கானாவின் முயற்சியாக இருக்கின்றது. எனினும், சில நேரங்களிலோ மக்கள் திரளின்போது கணிப்பில் தவறு ஏற்பட்டு விடுகின்றது.மேலும், பற்றாக்குறையும் ஏற்பட்டு விடக் கூடும்.

இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஓர் அறிவுரையை நாம் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

இரண்டு நபர்களின் உணவு மூன்று நபர்களுக்கு போதுமானதாகும். மூன்று நபர்களுக்கான உணவு நான்கு நபர்களுக்கு போதுமானதாகும்.

(முஸ்லிம் ஹதீஸ், ஹதீஸ் எண்: 2058)

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது:

ஒரு நபருக்கான உணவு இரண்டு நபர்களுக்கும், இரண்டு நபர்களுக்கான உணவு நான்கு நபர்களுக்கும், நான்கு நபர்களுக்கான உணவு எட்டு நபர்களுக்கும் போதுமானதாகும். (முஸ்லிம், கிதாபுல் ஷர்பா,ஹதீஸ் எண்: 2059)

எனவே இந்த விஷயத்தை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும்.

நான் முன்னரும் கூறியுள்ள ஒரு விஷயம் இருக்கின்றது. அது என்னவென்றால், டியூட்டி கொடுக்கக் கூடியவர்களுக்கும் எளிமையை உருவாக்க வேண்டும். உணவு கூடாரம் மற்றும் ஏனைய இடங்களிலும் தூய்மையை கருத்தில் கொள்ளுங்கள். சுத்தம் தொடர்பாக இந்த விஷயத்தை கருத்தில் கொள்ளுங்கள். அதாவது எளிமையை உருவாக்க வேண்டும். வீதிகளிலும், சாலைகளிலும் குப்பைகளை வீசாதீர்கள். அதிலும் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ளுங்கள். சில மக்கள் கடைவீதிகளிலிருந்து பொருட்களை வாங்குகின்றனர்; எங்கு அமர்ந்திருக்கின்றார்களோ அங்கு உண்ட பிறகும், பருகிய பிறகும் அதன் வெறும் பாக்கெட்களையும், உறைகளையும் அங்கும், இங்கும் வீசுவதற்கு பகரமாக குப்பைத் தொட்டிகளில் போடுங்கள். அப்போதுதான் பணிகளை முடிப்பவர்களுக்கு எளிதாக இருக்கும். மேலும், குறைந்த நேரத்தில் அதிக பணியை செய்து நிர்வாகத்தை மிகச் சிறந்த முறையில் நடத்த முடியும். பின்னர், உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துதல் என்பது எல்லா தரப்பிலிருந்தும் இருக்க வேண்டும் என்ற விஷயம் உள்ளது.

நான் ஊழியர்களுக்கும் கூறியுள்ளேன். உயர் நல்லொழுக்கத்தை விருந்தினர்களும் வெளிப்படுத்த வேண்டும். ஒரு ஹதீஸில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது எவர் நம்பிக்கை கொண்டிருக்கின்றாரோ ஒன்று அவர் நல்ல விஷயத்தை பேசட்டும் அல்லது அமைதியாக இருக்கட்டும். (முஸ்லிம், கிதாபுல் ஈமான், ஹதீஸ் எண்: 47)

எனவே சிலசமயம் அதிருப்திக்கான அப்படிப்பட்ட சூழல் உருவாகிவிட்டாலும் கூட கோபப்படுவதற்கு பகரமாக, தீய நடத்தையை வெளிப்படுத்துவதற்கு பகரமாக அமைதியை மேற்கொள்ளுங்கள். மேலும் இஸ்திஃஃபார் செய்யுங்கள். துஆக்களை ஓதிக் கொண்டிருங்கள்.

இதே போன்று, குழந்தைகளின் உணவு தொடர்பாகவும் கூறிவிடுகின்றேன். இதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். சிலமுறை மக்கள் பிள்ளைகளுக்கு வயிறு நிறைய உணவு கொடுத்து விடுகின்றனர். மேலும், பிள்ளைகளால் அவ்வளவு உண்ண முடியாது. அதனால் உணவு வீணாகி விடுகின்றது. எனவே நான் முன்னர் கூறிவந்தது போன்று,இங்கும் உணவு வீணாகுவதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். மேலும் பிள்ளைகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக உணவு வைத்துக் கொடுங்கள். மீண்டும், மீண்டும் கொடுக்க நேர்ந்தாலும் பரவாயில்லை.

எப்போதும் நினைவிற் கொள்ளுங்கள்! ஜல்ஸாவின் நோக்கங்களை நீங்கள் முழுமை செய்ய வேண்டும். மேலும், இந்த ஜல்ஸாவிற்குரிய பரக்கத்துகளையும், மேலும் எதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த ஜல்ஸாவை தொடங்கினார்களோ அந்த பரக்கத்துகளை பெறுவதற்காகவும், அவற்றால் உங்களின் பைகளை நிறைத்துக் கொள்வதற்கும் முயற்சி செய்யுங்கள்!

அன்னார் (அலை) ஒரு சந்தர்ப்பத்தில் இதனையும் கூறியிருந்தார்கள்:

ஜல்ஸாவில் அமர்ந்து அமைதியாக ஜல்ஸாவைக் கேளுங்கள்! சொற்பொழிவுகள் போன்றவற்றில் வெறும் நல்லது அல்லது கெட்டது என்று மட்டும் பார்க்காதீர்கள். மாறாக, என்ன விஷயம் கூறப்பட்டுக் கொண்டிருக்கின்றதோ அது அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைக்கு ஏற்புடையதாகும்; மேலும் அதன்படி நாம் அமல் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்ற விஷயத்தை பார்க்க வேண்டுமே தவிர யார் எடுத்துரைக்கின்றார்? மேலும் எவ்வாறு

எடுத்துரைக்கின்றார் என்று பார்க்கக் கூடாது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அனைத்து சகோதரர்களும் கவனமாக கேளுங்கள். நான் எனது ஜமாஅத்திற்காகவும், மேலும் எனது இருப்பு மற்றும் நஃப்ஸிற்காகவும் இதனையே விரும்புகின்றேன். மேலும், இந்த விஷயத்தை விரும்புகின்றேன். அதாவது சொற்பொழிவுகளில் இடம் பெறும் வெளிப்படையான கூற்றுகளை மட்டுமே விரும்பக் கூடாது. மேலும் சொற்பொழிவாளர் எப்படி மந்திரம் போன்ற கவர்ந்திழுக்கும் சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்? சொற்களில் எவ்வளவு அழுத்தம் உள்ளது? என்பதிலேயே அனைத்து நோக்கங்களும் வந்து நின்று விடக் கூடாது. நான் இந்த விஷயங்களில் திருப்தி கொள்வதில்லை.

நானோ இதனையே விரும்புகின்றேன். மேலும் செயற்கையான மற்றும் அலங்காரமான கூற்றுகளை நாம் விரும்புவதில்லை. இன்னும் கூறப்போனால், என்ன பணியாக இருந்தாலும் அது அல்லாஹ்விற்காக இருக்க வேண்டும் ;மேலும் என்ன விஷயம் பேசப்பட்டாலும் அது இறைவனுக்காக இருக்க வேண்டும் என்பதே எனது இயல்பின் தேட்டமாக இருக்கின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 360, 2022-ம் ஆண்டு பதிப்பு)

மேலும் கூறினார்கள்:

முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கு இதுவே காரணமாக அமைந்துள்ளது. அதாவது அவர்கள் பெரும், பெரும் மாநாடுகளை, அமைப்புகளை நடத்துகின்றனர். கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. மேலும், பெரும் பெரும் சொற்பொழிவாளர்கள், பேச்சாளர்கள் தங்களது சொற்பொழிவுகளை வாசிக்கின்றனர். கவிஞர் தனது சமுதாயத்தைக் குறித்து கவிதைகள் கூறுகின்றார். இந்த விஷயங்களின் போது அவர்கள் முழக்கமிடுகின்றனர். ஆனால், அதன் பிறகு எந்த தாக்கமும் ஏற்படுவதில்லை. மேலும் சமுதாயம் மீண்டும் அந்த முழக்கங்களின் காரணமாகவே வீழ்ச்சிக்கு இரையாகி விடுகின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 362, 2022-ம் ஆண்டு பதிப்பு)

எனவே இது எப்படிப்பட்ட போதனை மற்றும் சிறந்த தரம் என்றால், இதனை ஒவ்வொரு நபரும், ஒவ்வோர் அஹ்மதியும் தமது கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது நாம் வெறும் முழக்கமிடுவதற்காக அல்லது விருப்பத்திற்கேற்ற விஷயங்களை கேட்கக் கூடாது. மாறாக, அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்காக இந்த விஷயங்களின்படி அமல் செய்வதற்காக கேட்க வேண்டும். இதே நோக்கத்திற்காக ஒவ்வோர் அஹ்மதியும் இங்கு வரவேண்டும். மேலும் நீங்கள் வந்துள்ளீர்கள். நீங்கள் இதே நோக்கத்திற்காகத்தான் இங்கு வந்திருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். என்ன பணி நிகழ்ந்தாலும் அது அல்லாஹ்விற்காக இருக்க வேண்டும்; என்ன கூற்றாக இருந்தாலும் அது இறைவனுக்காக இருக்க வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியது போன்று, ஒவ்வொருவரும் இந்த அடிப்படையை தமது கருத்தில் கொள்ள வேண்டும். இது தொடர்பாகவும் நினைவிற் கொள்ளுங்கள். அதாவது நாம் நமது நாளை இறைவனை நினைவு கூர்வதில் கழிக்க வேண்டும்.

ஜல்ஸாவைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதும் கூட உங்களது நாவுகளை திக்ரே இலாஹியால் ஈரமாக வைக்க வேண்டும். பின்னர் நடந்தும், சுற்றியும் வரும்போதும், சந்திக்கும்போதும் அப்படியே செய்ய வேண்டும். மேலும் மக்களிடம் பேசிக் கொண்டிருக்கும்போதும் அந்த நேரத்திலும் மார்க்க விஷயங்களையே பேச வேண்டும். அல்லாஹ்வை நினைவு கூரும் விஷயங்களை பேச வேண்டும். திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய விஷயங்களை பேச வேண்டும். அல்லாஹ்வின் நினைவு மற்றும் மார்க்கத்திற்காக துஆக்கள் செய்வதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும்.

இறை தியானமே மனிதனின் எண்ணங்களையும் தூய்மைப்படுத்தக் கூடியதாகும். மேலும்,அவரை அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாக்கி விடுகின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் மிகவும் அழகான வடிவில் கூறினார்கள்:

அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்; அதாவது, இறை தியானம் செய்யுங்கள். மேலும் குறிப்பாக சபைகள் கூடியிருக்கும்போது அதிலோ இறை தியானம் செய்தால் அதன் நன்மையாக அல்லாஹ் இதனை கூறியுள்ளான்:

اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ

அதாவது நீங்கள் இறைவனை நினைவு கூர்ந்தால் பின்னர் இறைவனும் உங்களை நினைவு கூரத் தொடங்கி விடுவான். எனவே எந்த அடியாரை இறைவன் நினைவு கூர்ந்து கொண்டிருப்பானோ அவரை விட அதிக நற்பேறு பெற்றவர் வேறு யாராக இருக்க முடியும்? எவருடைய எஜமானன் அவரை நினைவு கூர்வானோ அவரை அழைப்பானோ அவரை விட நற்பேறு பெற்றவர் யாராக இருக்க முடியும்? திக்ரே இலாஹி என்பது மாபெரும் அருட்கொடையாகும்.

அன்னார் (ரலி) அறிவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

உங்களுக்கு பரிசு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நீங்கள் திக்ரே இலாஹி (இறைவனை நினைவு கூர்வதில்) ஈடுபட்டு கொண்டிருங்கள். அதனால் அல்லாஹ் மகிழ்ச்சியடைந்து விடுவான். பின்னர் உங்களை நினைவு கூர்வான். (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 4, பக்கம் 258, குத்பா பேருரை டிசம்பர் 25, 1914)

அல்லாஹ் நினைவு கூருகின்றான் என்றால், பின்னர் அவன் பரிசுகளை கொடுக்காமல் விடமாட்டான். அவன் அருள்களையும் வழங்குவான். எனவே அல்லாஹ்வின் அருட்களை ஈர்ப்பதற்காக இந்த சிறப்பான நாட்களில் இந்த விஷயங்களை குறிப்பாக நினைவில் வையுங்கள். மேலும் கவனம் செலுத்துங்கள். கலந்து கொள்ளக் கூடியவர்களும், மேலும் பணிகளை செய்யக் கூடிய அனைவரும் இந்த விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அதாவது நாம் நமது நாவுகளை இறை தியானத்தால் ஈரமாக வைக்க வேண்டும். மேலும், இது நிகழும்போது, பின்னர் எப்படிப்பட்ட ஒரு சூழல் உருவாகும் என்றால், அது நிச்சயமாக எதற்காக இந்த ஜல்ஸா நடத்தப்படுகின்றதோ அதற்கான சூழலாக இருக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

அனைவரும் கவனமாகக் கேட்க வேண்டும். மேலும் முழு கவனத்துடனும், சிந்தனையுடனும் கேட்க வேண்டும். ஏனெனில் இந்த விவகாரம் ஈமானுடையதாகும். இதில் கவனக் குறைவு, சோம்பல், மற்றும் கவனமின்மை போன்றவை மிகவும் மோசமான விளைவை ஏற்படுத்தி விடும். எந்த மக்கள் ஈமானில் கவனக் குறைவாக செயல்படுகின்றார்களோ அவர்களை விளித்து சில விஷயங்கள் எடுத்துரைக்கப்படும்போது அவர்கள் கவனத்துடன் அதனை கேட்பதில்லை. சொற்பொழிவாளர்களின் உரை எவ்வளவுதான் உயர்தரமான நன்மை பயப்பதாகவும், தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருந்தாலும் சரியே ; அதனால் அவர்களுக்கு எந்த பயனும் ஏற்படுவதில்லை.

அதுபோன்ற மக்கள் இருக்கின்றனர். அவர்களைக் குறித்து இவ்வாறு கூறப்படுகின்றது: அதாவது அவர்களுக்கு செவி இருக்கும்; ஆனால் கேட்க மாட்டார்கள். உள்ளம் இருக்கும்; ஆனால் புரிவதில்லை.

எனவே நினைவிற் கொள்ளுங்கள்; என்ன வெல்லாம் எடுத்துரைக்கப்படுகின்றனவோ அதனை கவனமாகக் கேளுங்கள். மேலும், ஆழ்ந்த கவனத்துடன் கேளுங்கள். ஏனெனில், எவர் கவனத்துடன் கேட்பதில்லையோ அவர் நீண்ட காலம் வரை பயனளிக்கக் கூடிய ஒரு நபரின் தோழமையில் இருந்தாலும் சரியே! அதனால் எந்தப் பயனும் ஏற்படுத்த முடியாது. (மல்ஃபூஸாத்,தொகுதி 2, பக்கம் 479, 2022-ம் ஆண்டு பதிப்பு)

நாம் இந்த விஷயங்களை கவனத்துடன் கேட்கும்போதும், பின்னர் அவற்றின்படி அமல் செய்வதாக உறுதிமொழி எடுக்கும்போதும் மேலும், அதற்காக தமது உள்ளங்களை பரிசுத்தமாக வைப்பதற்காக இறை தியானத்தால் தமது நாவை ஈரமாக வைக்கும்போதுதான் இந்த மூன்று நாட்களுக்கான பயன் கிடைக்க முடியும். ஜல்ஸாவில் அமர்ந்து கொண்டும் திக்ரே இலாஹி செய்யுங்கள். மேலும், துஆக்கள் செய்து கொண்டிருங்கள். துரூத் ஓதிக் கொண்டிருங்கள். மேலும், பின்னர் நீங்கள் சொற்பொழிவு கேட்டால் பின்னர் அதன் சிறப்பான தாக்கமும் உங்கள் மீது ஏற்படும்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை)அவர்கள் இது தொடர்பாக பெரும் கவலையை வெளிப்படுத்தியுள்ளார்கள். அதாவது நீங்கள் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கவனத்துடன் கேட்கவில்லை என்றால், பின்னர் நீங்கள் இங்கு ஜல்ஸாவிற்கு வருவதால் எந்தப் பயனும் இல்லை.

இந்த விஷயத்தை குறிப்பாக நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, நமது நோக்கம் நமது சீர்திருத்தமாகும். நமது மார்க்க அறிவை அதிகரிப்பதாகும். நமது ஆன்மிக நிலைகளை மேம்படுத்துதல் ஆகும். அதற்காக நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். ஒழுக்க ரீதியில் தமது நிலைகளை மேம்படுத்துதல் ஆகும். தமது நண்பர்கள் மற்றும் சகோதரர்களுக்காக தியாக உணர்வை உருவாக்குவது ஆகும். உள்ளப் பகைமையை நீக்குவது ஆகும். இதுவும் ஒரு மாபெரும் நோக்கமாகும். இங்கு உருவாகியுள்ள இந்த சூழல் இருக்கின்றது. இதில் இவ்வளவு ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடியுள்ளனர். இதுவும் எப்படிப்பட்ட ஒரு சூழல் என்றால், இதில் ஒருவர் மற்றவருடன் சகோதரத்துவம் மற்றும் நேசத்துடன் நடந்து கொண்டால் பின்னர் அது எப்படிப்பட்ட நிலைமைகளையும்,சூழலையும் உருவாக்கும் என்றால், அதில் இஸ்லாமிய போதனையின் சிறப்பம்சமான அன்பு,நேசம், சகோதரத்துவம் இருக்கும். மேலும் அதன்படி அமல் செய்தால்தான் மனிதன் அல்லாஹ்வின் பார்வையில் கண்ணியத்திற்குரியவனாகவும், அவனது அருளைப் பெறக் கூடியவனாகவும் ஆக

முடியும். அன்னார் (அலை) தமது ஏராளமான சொற்பொழிவுகள் அனைத்திலும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். அதாவது ஜல்ஸாவிற்கு வருவதன் ஒரு நோக்கம் உயர் நல்லொழுக்கத்தை பெறுவது ஆகும். மேலும் இதனையும் கூறியுள்ளார்கள். அதாவது, உயர் நல்லொழுக்கத்தின் வெளிப்பாடு என்பது எல்லா தரப்பிலிருந்தும் இருக்க வேண்டும்.

சிலமுறை சின்னச் சின்ன விஷயங்களில் பகைமைகளும், சண்டைகளும் உருவாகி விடுகின்றன. எந்த அளவிற்கு என்றால், சிலமுறை ஊழியர்களுக்கிடையில் சண்டைகள் ஏற்பட்டு விடுகின்றன. அப்படி ஒருபோதும் நிகழக் கூடாது. மிகவும் இனிய குணத்தை வெளிப்படுத்த வேண்டும். எனவே இதன் பக்கம் ஊழியர்களும், விருந்தினர்களும் இருவரும் கவனம் செலுத்துங்கள். அதாவது நமது ஒழுக்கம் எப்போதும் உயர்வானதாக இருக்க வேண்டும்.மேலும், எல்லாத் தீங்கிலிருந்தும் தப்பிப்பதற்காக எப்போதும் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும்.

இதே போன்று ஜல்ஸா தொடர்பாக இன்னும் சில விஷயங்களை நான் கூற விரும்புகின்றேன். முதல் விஷயம் என்னவென்றால், ஜல்ஸாவின் நாட்களில் நீங்கள் எங்கு தங்கியிருந்தாலும், நீங்கள் மஸ்ஜிதிற்கு செல்லும்போது, குறிப்பாக லண்டனில் பைத்துல் ஃபுதூஹ் அல்லது மஸ்ஜித் ஃபஸ்லிற்கு செல்லும்போது, இஸ்லாமாபாத் இருக்கின்றது அல்லது இங்குள்ள இடம் உள்ளது.

ஆக எங்கு நீங்கள் சென்றாலும் உங்களின் அண்டை அயலார்களையும் கவனத்தில் கொள்ளுங்கள். மேலும் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருங்கள்.

சாலைகளின் சட்டத் திட்டங்களை பேணுங்கள். கூட்டநெரிசலின் காரணமாக சிலமுறை போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. எனவே மக்களின் வீடுகளுக்கு முன்னால் எந்தவிதமான குப்பையையும் கொட்டாதீர்கள். குழந்தைகளை கொண்ட பெண்களுக்காக தனியாக கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கும் கூறிவிடுகின்றேன். அதாவது, பெண்கள் அடம்பிடிக்காமல் குழந்தைகளுக்கான அந்தக் கூடாரத்திலேயே இருக்க வேண்டும். அங்கு கூச்சல் போடாமல் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில், சிலமுறை இவ்வாறு நிகழ்கின்றது. அதாவது, குழந்தைகள் குறைவாகவே கூச்சலிடுகின்றனர். ஆனால், பெண்கள் என்ன கருதுகின்றார்கள் என்றால், நாங்கள் இந்தக் கூடாரத்திற்கு வந்து விட்டோம்; எனவே இங்கு பேசுவது அனுமதிக்கப்பட்டதாக ஆகிவிட்டது என்று கருதுகின்றனர். இதுபோன்ற விஷயங்களிலிருந்தும் அவர்கள் தவிர்ந்து கொள்ள வேண்டும். மேலும் சொற்பொழிவுகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும், என்ன நிகழ்ச்சிகள் நடக்கின்றனவோ அவற்றை கவனமாக கேட்க வேண்டும். அவர்கள் தாமே தமது முன்மாதிரியை காட்டும்போது, பிள்ளைகளும் அமைதியாக கேட்பார்கள். சில தாய்மார்கள் மாஷாஅல்லாஹ் எப்படிப்பட்டவர்கள் என்றால், அவர்கள் பிள்ளைகளுக்கு இவ்வாறு தர்பிய்யத் வழங்குகின்றனர் அல்லது அவர்களின் கவனத்தை மாற்றுவதற்காக அவர்களின் கைகளில் ஏதாவது பொருளை கொடுத்து விடுகின்றனர். அதனால் குழந்தைகள் அதில் மும்முரமாக இருக்கின்றனர். மேலும், தாய்மார்கள் அமைதியாக நிகழ்ச்சிகளையும் கேட்டு விடுகின்றனர். ஆனால், சிலர் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், அவர்கள் பரஸ்பரம் தங்களுக்குள் பேசிக் கொண்டிருக்கின்றனர். அது குறித்து நிர்வாகம் புகார் செய்கின்றது. எனவே இதுபோன்ற முறையீடு ஒருபோதும் உருவாக அனுமதிக்காதீர்கள்.அவர்கள் தடுக்கப்படும்போது, பின்னர் அவர்கள் தரப்பிலிருந்து கோபம் வெளிப்படுகின்றது. ஆனால், தவறு இரண்டு தரப்பிலிருந்தும் நிகழ்ந்து விடுகின்றது. ஓர் ஊழியர் கடுமையாக பேசிவிட்டார் என்றால் பின்னர் விருந்தாளியும் கடுமையாக பதில் கொடுத்து விவகாரத்தை மேலும் சிக்கலாக்கி விடுகின்றார். எனவே எந்த தரப்பிலிருந்தும் பிரச்சனை ஏற்படக் கூடாது. இன்னும் கூறப்போனால், அன்பு மற்றும் நேசத்திற்கான சூழலே நிலைபெற்றிருக்க வேண்டும்.

இதேபோன்று, பார்க்கிங் மற்றும் கேட் உட்பட அனைத்து ஏற்பாடுகளும் இருக்கின்றன. விருந்தினர்கள் ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அப்போதுதான் அனைத்து ஏற்பாடுகளும் மிகவும் எளிதாகவும், வழக்கமாக செயல்முறையில் உள்ள வழிமுறைகளிலும் நடக்க முடியும். இதே போன்று விருந்தினர்கள் தங்களுடைய சுற்றுப்புறத்தின் மீதும் பார்வை வைக்க வேண்டும். ஏதாவது சந்தேகத்திற்குரிய பொருளைக் கண்டால் உடனடியாக தகவல் கொடுக்க வேண்டும். ஒருவர் மற்றவர் மீது பார்வை வைப்பதால் தீயவரும், தீங்கிழைக்கும் எண்ணம் கொண்டவரும் கூட விலகிக் கொள்வார் அல்லது எச்சரிக்கையாகி விடுவார். மேலும், அவருக்கு தீங்கிழைப்பதற்கான எண்ணமே உருவாகாது.

எனவே கலந்து கொள்ளக் கூடிய ஒவ்வொரும் இந்த விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, அவரும் சுற்றுப்புறத்தை பாதுகாப்பாக வைப்பதற்கும், அதனை பாதுகாப்பதற்கும் தம்மைச் சுற்றி பார்வை செலுத்த வேண்டும். இதே போன்று டிஸிப்ளினை ஏற்படுத்தக் கூடிய நிர்வாகம் உள்ளது. அவர்களுக்கும் மக்கள் முழுமையான ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். உங்களது அடையாள அட்டையை எப்போதும் உங்களுடன் வைத்திருக்க வேண்டும். மேலும் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். எந்த நபர்கள் (ஜமாஅத் ஏற்பாட்டின் கீழ் இருக்கும்) தங்குமிடத்தில் தங்கியிருக்கின்றார்களோ அவர்கள் இதற்கு முயற்சி செய்யட்டும்; அதாவது,தமது விலையுயர்ந்த பொருட்களை அங்கு விட்டு விட்டு செல்லாதீர்கள். இங்கு பாதுகாப்பிற்கான ஏற்பாடு கண்டிப்பாக இருக்கின்றது. ஆனால், இருந்தாலும் உங்களது விலையுயர்ந்த பொருட்களை உதாரணமாக ரொக்கம் போன்றவை இருக்கின்றன. அதனை உங்களுடனேயே எடுத்துச் செல்லுங்கள். அப்போதுதான் எவ்விதமான பாதிப்பிற்கும் வாய்ப்பு இருக்காது.

நீங்கள் அனைவரும் இந்த ஜல்ஸாவிலிருந்து முழுமையாக பயனடையக் கூடியவர்களாக ஆகுவதற்கு அல்லாஹ் அருள் செய்வானாக. மேலும் அதன் பரக்கத்துகளிலிருந்து பயன் பெறக் கூடியவர்களாக ஆவீர்களாக. மேலும், இங்கிருந்து திரும்பி செல்கின்றபோது உங்களது மடிகளை அல்லாஹ்வின் அருட்களால் நிறைத்துக் கொண்டு செல்பவர்களாக இருப்பீர்களாக! அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசுகளாக ஆகியவாறு நீங்கள் திரும்புவீர்களாக! அல்லாஹ் எப்போதும் வாழ்வில் உங்கள் மீதும் உங்களின் சந்ததிகள் மீதும் அருள் செய்து கொண்டிருப்பானாக! எப்போதும் அஹ்மதிய்யத்திற்கு பயனளிக்கக் கூடிய இருப்பாக திகழ்ந்து உலகில் வாழ்வை கழிக்கக் கூடியவர்களாக இருப்பீர்களாக! உங்களது சந்ததிகளும் இவ்வாறு ஒரு தூய மற்றும் பயனளிக்கக் கூடிய இருப்பாக திகழ்ந்து வாழ்வை கழிப்பவர்களாக இருக்கட்டுமாக! கியாமத் வரை இந்த தொடர் நிலைபெற்றிருக்க அல்லாஹ் அருள் செய்வானாக!

இறுதியில் இதனையும் நான் கூறிவிடுகின்றேன். அதாவது கடந்த ஆண்டுகளைப் போன்று இந்த ஆண்டும் பல்வேறு துறைகளின் கண்காட்சிகள் இருக்கின்றன. மேலும் நல்ல தகவல்களை அறிந்து கொள்வதற்கும், அறிவை வளர்ப்பதற்கும் ஒரு வழிமுறையாகும். அவற்றையும் பார்வையிடுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஓரிடத்தில் அனைத்து கண்காட்சிகளும் ஒன்று திரண்டுள்ளன. இதேபோன்று புத்தகக் கடையிலும் புதிய நூல்களும் வந்துள்ளன. அங்கும் கண்டிப்பாக செல்லுங்கள். இடைவேளையின்போது, கடைவீதிகளில் மட்டுமே சுற்றித் திரியாதீர்கள் அல்லது அங்குள்ள கடைவீதிகளில் மட்டுமே பொருட்களை வாங்காதீர்கள். மாறாக, ஆன்மிக உணவுத் தட்டிலிருந்தும் பயன்பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் அனைவருக்கும் நற்பேறு வழங்குவானாக!

(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், ஆகஸ்ட் 15, 2025, பக்கம்,2 -6)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

*திருக்குர்ஆனிலிருந்து...*

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

## கிளை அமைப்புகளுக்கான வருடாந்திர தேசிய இஜ்திமாக்கள்- 2025

ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மூன்று கிளை அமைப்புகளின்- அதாவது **மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் பாரத் மற்றும் லஜ்னா இமாயில்லாஹ் பாரத்** ஆகிய மூன்று கிளை அமைப்புகளின் தேசிய அளவிலான வருடாந்திர இஜ்திமாக்களை **காதியான் தாருல் அமானில் 2025-ம் ஆண்டு** வருகிற **அக்டோபர் 24,25,26** ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு பரிவுடன் அனுமதி நல்கியுள்ளார்கள்.

உறுப்பினர்கள் துஆக்கள் செய்தவாறு இந்த தேசிய இஜ்திமாக்களில் கலந்து கொள்வதற்கு சாத்தியமான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவும்.

(ஸதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத்)

* * * * * * * *

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றிப் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை**

ஹிஜ்ரத்திற்கு முன்னர் ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உஸ்மான் பின் தல்ஹா அவர்களிடம் கஅபாவின் திறவுகோலை கேட்டார்கள்; அப்போது, அவர் பதில் அளித்தவாறு இறைத் தூதர் (ஸல்) அவர்களை ஏசிப்பேசினார். மேலும், மிகவும் மோசமான வார்த்தைகளை பயன்படுத்தினார். அன்னார் (ஸல்) அந்த நேரத்தில் மிகவும் பொறுமையை மேற்கொண்டார்கள். மேலும், கூறினார்கள்:

يَا عُثْمَانُ لَعَلَّكَ سَتَرَى هٰذَا الْمِفْتَاحَ يَوْمًا بِيَدِي أَضَعُهُ حَيْثُ شِئْتُ

பொருள்: உஸ்மானே! நினைவிற் கொள்; இந்த திறவுகோல் ஒருநாள் இல்லையென்றால் ஒருநாள் எனது கைக்கு வரும்; மேலும், நான் எனது விருப்பத்தின்படி எவருக்கு விரும்புவேனோ அவருக்கு கொடுப்பேன்.

மக்கா வெற்றி நாளன்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கஅபத்துல்லாஹ்வில் இருந்து வெளியில் வந்தவாறு உஸ்மான் பின் தல்ஹா அவர்களை அழைத்தார்கள். மேலும் அன்னாரிடம் திறவுகோலை திருப்பிக் கொடுத்து விட்டார்கள்; மேலும், اَلْيَوْمُ يَوْمُ بِرٍّ وَوَفَاءٍ என்று கூறினார்கள்.

பொருள்: இன்று நன்மை மற்றும் உடன்படிக்கையை நிறைவேற்றுகின்ற நாளாகும்

உலகின் நிலைமைகளோ உங்களுக்கு வெளிப்படையானவையாகும். துஆக்கள் செய்து கொண்டிருங்கள் அசாதாரணமான நிலைமைகளுக்காக மக்கள் சில மாதங்களுக்காக அத்தியாவசிய பொருட்களை எவர்களால் முடியுமோ அவர்கள் வீடுகளில் வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வாறிருப்பினும், அல்லாஹ் உலகின் மீது கருணை செய்வானாக! மேலும் போரின் அபாயகரமான மற்றும் ஆபத்தான நிலைமைகளிலிருந்து பாதுகாப்பானாக!

ராஜா அப்துல் மாலிக் ஸாஹிப் அவர்களின் துணைவியார் மர்ஹூமா அமத்துன் நஸீர் நிக்ஹத் ஸாஹிபா மற்றும் மதிப்பிற்குரிய அபூ பக்ர் ஸாஹிப் அவர்களின் மகன் மர்ஹூம் அல்ஹாஜ் யஃகூப் அஹ்மது ஸாஹிப் ஆகியோரைப் பற்றிய நற்குறிப்புகளும் அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையும்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 ஜுலை 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **வஃபா** மாதம் **11 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

சென்ற இதழின் தொடர்ச்சி....... .

அர்பாபே ஸீர் இவ்வாறு கூறுகின்றார்கள்: அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவாசிகளுக்கு பாதுகாப்பு வழங்கியிருந்தார்கள் என்றபோதிலும், பத்து நபர்கள் தொடர்பாக அவர்களை எங்கு கண்டாலும் அங்கு கொலை செய்து விடுங்கள் என்று கட்டளை வழங்கினார்கள். அவர்களில் சிலர், உதாரணமாக அப்துல்லாஹ் பின் கதல், மிக்யஸ் பின் ஸுபாபஃ ஆகியோர் கொலைக் குற்றவாளிகளாக இருந்தனர். மேலும், பழிவாங்குதல் என்ற அடிப்படையில் கொல்லப்பட்டிருந்தனர். இவர்களையும் ஏற்றுக் கொண்டால் பின்னர் அவர்கள் இருவரும் கொலை குற்றவாளிகளாக இருந்தனர். எனவே கொலை செய்யப்பட்டனர்.ஆனால், இன்னும் பலர் இருந்தனர்; அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தனர் என்றால், அவர்கள் மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை துன்புறுத்தி வந்தார்கள் ; அல்லது அன்னாருக்கு எதிராக மோசமான கவிதைகளை கூறிவந்தனர்; அன்னாருக்கு துன்புறுத்தி வந்தார்கள் அல்லது தீய கவிதைகளை கூறிவந்தனர். இதுவே அவர்களின் குற்றமாக இருந்தது. அவர்களில் ஒரு பெண்மணி – அவள் அன்னாருக்கு எதிராக தீய கவிதைகளை பாடி வந்தாள் என்ற குற்றத்திற்காக கொலை செய்யப்பட்டாள்; இவ்வாறு கூறப்படுகின்றது. ஆனால், அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஆழ்ந்த விமர்சனங்களின் அடிப்படையில், இந்தக் கூற்று சரியானது கிடையாது. இந்தக் குற்றத்தை இழைத்த குற்றவாளிகளாக முழு மக்காவும் இருந்தது. ஏளனம் செய்து வந்தனர் ; மேலும் தீய கவிதைகளைக் கூறிவந்தனர் என்ற இந்த விஷயத்தையே எடுத்துக் கொண்டால், முழு மக்காவே இதைத் தான் செய்து வந்தது. அப்படியென்றால் எல்லாரையும் கொலை செய்திருக்க வேண்டும். குறைஷியர்களில் ஓரிருவரைத் தவிர வேறு எவர் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடும் துன்பங்களை இழைக்கவில்லை. அவ்வாறிருந்தபோதிலும் அந்த மக்களுக்கோ اَنْتُمُ الطُّلَقَاءُ என்று அறிவிப்பு செய்யப்பட்டது. அதாவது, நீங்கள் சுதந்திரமானவர்கள் ஆவீர்கள். எந்த மக்கள் கொலை செய்யப்பட்டதாக கூறப்படுகின்றதோ அவர்கள் இவர்களுடன் ஒப்பிடும் போது குறைந்த அந்தஸ்துடைய குற்றவாளிகளாக இருந்தனர்.

ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பு ஸிஹாஹ் ஸித்தாவில் இடம் பெற்றுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவரையும் தனிப்பட்ட விஷயங்களுக்காக பழிவாங்கியது கிடையாது.

கைபரில் யூதப் பெண்மணி அன்னாருக்கு விஷம் கொடுத்தார். அவரை கொலை செய்வதற்கு கட்டளை பிறப்பிக்கப்படுமா? என்று அவர் தொடர்பாக மக்கள் கேட்கவும் செய்தனர். ஆனால், கூடாது என்றே கட்டளை வந்தது. கைபரின் குஃப்ருஸ்தானைச் சேர்ந்த ஓர் யூதப் பெண்மணி ரஹ்மத்துல் ஆலமீன் (ஸல்) அவர்களுக்கு விஷம் கொடுத்த பிறகும் கூட உயிர் பிழைத்திருக்க முடியும் என்றால், பின்னர் ஹரமில் அதை விட கீழான குற்றம் புரிந்த குற்றவாளிகள் நபியின் மன்னிப்பிலிருந்து எப்படி இழப்பிற்குரியவர்களாக இருக்க முடியும்? தராயத்தின் அடிப்படையில் போதுமானது இல்லையென்றாலும் கூட ரிவாயத்தின் அடிப்படையிலும் இந்த சம்பவம் முற்றிலும் நம்பகத்தன்மையற்றதாக இருக்கின்றது. அறிவைக் கொண்டு ஆய்வு செய்யாவிட்டாலும் கூட ரிவாயத்தும் தவறானதாகும். ஏனெனில் ஸஹீஹ் புஹாரீயில் இப்னு கதல் என்பவனுடைய கொலை பற்றிய குறிப்பே உள்ளது. மேலும், அவன் பழிக்குப் பழி என்ற ரீதியில் கொல்லப்பட்டான் என்பதை பொதுவாக அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். மிகைஸின் கொலையும் கூட ஷரீஅத் அடிப்படையிலான பழிவாங்குதலாக இருந்தது. மற்றவர்களை கொலை செய்யும்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளை தொடர்பாக இந்த காரணம் எடுத்துரைக்கப்படுகிறது. அதாவது அவர்கள் ஒருகாலத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு துன்பம் கொடுத்து வந்தனர். அந்த அறிவிப்புகள் இப்னு இஸ்ஹாக் வரை சென்று முற்றுப் பெற்று விடுகின்றன. அதாவது ஹதீஸின் விதிமுறைகளின் படி அந்த அறிவிப்பு தொடர்பற்றதாகும். அது நம்பகத்தன்மையற்றதாகும். இது குறித்து முன்வைக்கப்படும் மிகவும் நம்பத் தகுந்த அறிவிப்பு என்பது அபூ தாவூதுடைய அறிவிப்பாகும். அதில் இந்த விஷயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றி நாளன்று கூறினார்கள்:

நான்கு நபர்களுக்கு ஒருபோதும் எங்கும் பாதுகாப்பு கொடுக்க முடியாது. அபூ தாவூத் அந்த ஹதீஸை பதிந்து இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

இந்த அறிவிப்பிற்கு தேவைப்படுகின்ற சான்று எனக்கு கிடைக்கவில்லை. அபூ தாவூதுடைய இந்த

அறிவிப்புகளைக் குறித்து மற்ற நூல்களில், அவை பலவீனமானவையாகும் என்றும் எழுதப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் எதிரிகளாக முன்னணியில் இருந்த சில குறைஷிய தலைவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையை குறித்த செய்தியை செவியுற்று மக்காவில் இருந்து ஓடிவிட்டனர். ஆயினும், அவர்களை கொலை செய்வதற்காக கட்டளை வழங்கப்பட்டிருந்த காரணத்தினால் தப்பியோடி விட்டனர் என்பது இப்னு இஸ்ஹாகின் கற்பனை ஆகும். (ஷிப்லி அவர்களின் ஸீரத்துன் நபீ (ஸல்) அவர்கள், தொகுதி 1, பக்கம் 350 - 351, இஸ்லாமிய பதிப்பகம்)

சுருக்கமாக, மக்கா வெற்றி நேரத்தில் சில நபர்களை மட்டுமே கொலை செய்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. மேலும், அவர்கள் தொடர்பாக நீதி நெறி தீர்ப்பவராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

வல்ல ஏக இறைவனின் தரப்பிலிருந்து எவர்களுக்கு தண்டனை கொடுப்பதற்கான உறுதியான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததோ அந்த சில மக்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டது. அதாவது அவர்கள் நான்கு, ஐந்து நபர்களாக இருந்தனர். மேலும், நிரந்தரமாக சபிக்கப்பட்டவர்களைத் தவிர மற்ற அனைத்து எதிரிகளும் மன்னிக்கப்பட்டு விட்டார்கள்.
(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 287, அடிக்குறிப்பு எண்: 11)

ஆக, இதுவே இதன் உண்மைத்துவம் ஆகும். எனவே கொலை செய்யப்பட்ட இத்தனை நபர்கள் தீய கவிதைகளை கூறிவந்தனர் என்றோ நபித்துவ நிந்தனை செய்து வந்தனர்(அதனால் கொல்லப்பட்டனர்) என்றோ கூறுவது அனைத்தும் தவறாகும். எஞ்சிய விஷயங்களை எதிர்வரும் நாட்களில் எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

உலகின் நிலைமைகளோ உங்களுக்கு வெளிப்படையானவையாகும். துஆக்கள் செய்து கொண்டிருங்கள். அது தொடர்பாக முன்னரும் நான் பலமுறை கூறியிருக்கின்றேன். கூறிகொண்டு இருக்கின்றேன். ஏற்பட்டு வரும் அசாதாரண சூழல்களை நினைவூட்டி வந்துள்ளேன். முன்னரும் பலமுறை நான் கூறியுள்ளேன். அதாவது அசாதாரணமான நிலைமைகளுக்காக மக்கள் சில மாதங்களுக்காக அத்தியாவசிய பொருட்களை எவர்களால் முடியுமோ அவர்கள் வீடுகளில் வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வாறிருப்பினும், அல்லாஹ் உலகின் மீது கருணை செய்வானாக! மேலும் போரின் அபாயகரமான மற்றும் ஆபத்தான நிலைமைகளிலிருந்து பாதுகாப்பானாக!

தற்போது நான் சில மர்ஹூம்களைப் பற்றி குறிப்பிடுவேன். அவர்களின் ஜனாஸா தொழுகையை பின்னர் தொழ வைப்பேன்.

அவர்களில் முதலாம் நபர் ராஜா அப்துல் மாலிக் ஸாஹிப் அவர்களின் துணைவியார் அமதுன் நஸீர் நிக்ஹத் ஸாஹிபா அவர்களுடையதாகும். அன்னாரின் மரணம் கடந்த நாட்களில் 70-வது வயதில் மரணம் நிகழ்ந்துள்ளது. மர்ஹூமா வஸிய்யத் செய்தவராக இருந்தார். ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகன் வழிப் பேத்தியாக இருந்தார்கள். ஹஸ்ரத் நவாப் அமதுல் ஹஃபீழ் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களின் மகள் வழிப் பேத்தியாக இருந்தார்கள். கர்னல் மிர்ஸா தாவூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகளாக இருந்தார்கள்.அமெரிக்காவிலும் அன்னார் நீண்ட காலம் வாழ்வை கழித்துள்ளார்கள். அங்கு சுமார் பத்து ஆண்டுகள் அவர்களுக்கு லஜ்னா அமைப்பில் மால் செகரட்டரியாகவும், விருந்து உபசரிப்பு செயலராகவும் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது.

அன்னாரின் மகள் கூறுகின்றார்கள்: தொடர்ந்து ஸதகா கொடுப்பதை பேணி வந்தார்கள். இரகசியமாக கொடுத்து வந்தார்கள். மேலும், சிறிய சிறிய கால இடைவெளியில் ஆட்டை ஸதாகாவாக கொடுத்து ஏழைகளுக்கு வழங்கி வந்தார்கள். பொருளாதார உதவி செய்து வந்தார்கள். ஏழைகளுக்கு வீடும் கட்டி கொடுத்து இருக்கின்றார்கள். கூறுகின்றார்கள்: ஒருநாள் இரவில் அன்னார் கனவில் இவ்வாறு கண்டார்கள்:

அதாவது, தமது வளையல்களை கழற்றி தமது மாமிக்கு கொடுக்கின்றார்கள். அப்போது அவர்கள் உடனடியாக அந்த தங்க வளையல்களை ஏழைகளுக்கு கொடுப்பதற்காக கொடுத்து விட்டார்கள். மிகவும் விருந்து உபசரிப்பு செய்யக் கூடிய பெண்மணியாக இருந்தார்கள். தகுதியானவர்களுக்கும் மிகவும் உதவி செய்து வந்தார்கள். மிகவும் அனுதாப உணர்வு இருந்தது.

இவர்கள் கூறுகின்றார்கள்: நகைச்சுவை இயல்பு படைத்தவராக இருந்தார்கள். எனவே மக்கள் அறிந்துள்ளனர். ஆனால், நான் அன்னாரை இவ்வாறு கண்டேன். அதாவது, இரவுகளில் மிகவும் கடுமையாக துஆக்கள் செய்து வந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், எங்களுடைய வீட்டின் தளமும் கூட அதிர்ந்து கொண்டிருந்தது. மேலும், விருந்து உபசரிப்பு செய்வது என்பது குறிப்பாக அன்னாரின் பண்பாக இருந்தது.

கூறுகின்றார்கள்: நாங்கள் திக்ரே இலாஹி எனும் இறைவனை நினைவு கூரும் முறையை அம்மாவிடமிருந்தே கற்றுக் கொண்டுள்ளோம். துரூத் எப்போதும் ஓதி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கவிதைகளைப் படித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் எத்தனை முறை செவியுற்றோம் என்றால் எங்களுக்கு அவை மனனமாகிவிட்டன. அண்டை வீட்டுக் காரர்கள், உறவினர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளக் கூடிய பெண்மணியாக இருந்தார்கள்.

இதனை அன்னாரின் மகள் ஆயிஷா எழுதியுள்ளார்கள்.

அன்னாரின் மருமகன் இவ்வாறு எழுதியுள்ளார்: மௌனமாக உதவி செய்து வந்தார்கள். மேலும், அல்லாஹ்வும் அன்னாருக்கு சிலமுறை சில நபர்களின் மூலம் உதவி செய்வதற்காக தகவல் கொடுத்து வந்தான். ஒருமுறை அன்னாருக்கு கனவில், ஒரு வாழ்வை அர்ப்பணித்தவருக்கு திருமணம் நிகழ உள்ளது; அவருக்கு உதவி செய்யுங்கள் என்று அன்னாருக்கு கனவில் கூறப்பட்டது. அப்போது உடனடியாக அவருக்கு ஒரு லட்சம் ரூபாய் அனுப்பி வைத்து விட்டார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

இரண்டாவது ஜனாஸா அபூ பக்ர் ஸாஹிப் அவர்களின் மகன் மதிப்பிற்குரிய அல்ஹாஜ் யஃகூப் அஹ்மது ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் அஹ்மதிய்யா சீனியர் உயர்நிலைப் பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் ஆவார்கள். மேலும், கானாவின் தேசிய தப்லீஃக் செயலர் ஆவார்கள். ஒரு விபத்தில் 63 வயதில் கடந்த நாட்களில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது.

மர்ஹூம் إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். மன்கஸிம் என்பது அங்குள்ள ஒரு நகரமாகும். அங்கு செல்லும்போது ஒரு லாரியுடன் அன்னாரின் வண்டி மோதி விட்டது. அங்கு மூளையில் காயம் ஏற்பட்டது. அதன் காரணமாக இவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

உறவினர்களில் إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ இரண்டு மனைவிமார்களும்,நான்கு பிள்ளைகளும், தாயும், ஒரு சகோதரியும், ஒரு சகோதரனும் இருக்கின்றனர்.

துவக்கக் கல்விக்குப் பிறகு மிஷனரி பயிற்சி கல்லூரி ஸால்ட் போன்ட் என்ற இடத்தில் சேர்ந்தார்கள். மேலும் அங்கு படித்து முடித்து விட்ட பிறகு பின்னர் அவர்கள் பல்வேறு இடங்களில் ஜமாஅத் தொண்டுகளுக்காக பணியமர்த்தப்பட்டார்கள். அடுத்து, அவர்களுக்கு ஜமாஅத்தின் சார்பாகவே யூனிவர்சிட்டி ஆஃப் கானாவில் Admission பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு பிஸினஸ் அட்மினிஸ்டேரேஷன் பிரிவில் அன்னார் டிகிரி படித்து முடித்துள்ளார்கள். மேலும் அங்கிருந்து டிகிரி பெற்றுக் கொண்ட பிறகு அவர்களுக்கு அரசாங்க ஸர்வீஸ் செய்வதற்கான சலுகை கொடுக்கப்பட்டது. ஆனால், அன்னார் அதனை மறுத்து விட்டார்கள். ஏனெனில், இவர்கள் வாழ்வை அர்ப்பணித்தவராக இருந்தார்கள். மேலும், வக்ஃபிற்கான ஆன்மாவுடன் அன்னார் எப்போதும் பணி செய்துள்ளார்கள். அரசாங்க பள்ளிக்கூடத்தில் சென்று விட்ட பிறகும் கூட அவ்வாறே செய்தார்கள். அரசாங்கம் பொருள் உதவி செய்து வந்தது. ஆனால், பள்ளிக் கூடம் ஜமாஅத்துடையதாகவே இருந்தது. பின்னர் கல்வி பயின்று விட்டு அங்கு தலைமை ஆசிரியராக ஆகிவிட்டார்கள். ஸலாகா மற்றும் குமாஸி போன்ற இடங்களில் அஹ்மதிய்யா பள்ளிக் கூடத்தில் இவர்கள் தலைமை ஆசிரியர் என்ற ரீதியில் பணி செய்து வந்து கொண்டிருந்தார்கள். மேலும் அங்குள்ள மக்களும், நிர்வாகமும், அரசாங்க அதிகாரிகளும் , மாணவர்களும் எப்போதும் அன்னாரை நினைவு வைக்கின்றனர்.

நான் கூறியது போன்று, அன்னார் தேசிய தப்லீஃக் செயலராகவும் இருந்தார்கள். மேலும் அன்ஸாருல்லாஹ் அமைப்பில் காயித் தர்பிய்யத் என்ற ரீதியிலும் தொண்டாற்ற நற்பேறு பெற்றார்கள். கல்வியாளராக இருந்தார்கள். கல்வித் துறையில் இருக்கும் சில பெரிய கமிட்டிகளில் அன்னாருக்கு உறுப்பினராக ஆகுவதற்கு நற்பேறு

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

கிடைத்தது. CHASS என்ற அமைப்பின் தலைவராக இருந்தார்கள். அதாவது கான்ஃபிரன்ஸ் ஆஃப் ஹெட்ஸ் ஆஃப் அஸிஸ்டெட்(Assisted) என்ற அமைப்பின் தலைவராக இருந்தார்கள். KNUST அதாவது Kwame Nkrumah யூனிவர்சிட்டி ஆஃப் சைன்ஸ் அன்ட் டெக்னாலஜி கவுன்ஸில் உறுப்பினராக இருந்தார்கள். (GTEC) ஜி.டி.ஈ.சி கானாவின் கல்விக் கமிஷனின் உறுப்பினராக இருந்தார்கள். கமிட்டி உறுப்பினராக இருந்தார்கள். WAEC அதாவது வெஸ்ட் ஆஃப்ரிக்கன் எக்ஸாமினேஷனனின் கவுன்ஸில் உறுப்பினராக இருந்தார்கள். ஏசிபி (ACP) என்ற ஆஃப்ரிக்கன் கான்ஃபடெரேஷனின் செகரட்டரி ஜெனரலாக இருந்தார்கள். அன்னாரின் மரணத்தையொட்டி தென் ஆஃப்ரிக்காவின் ESwatini பிரின்ஸிபல் அசோஸியேஷன் (EPA) என்ற அமைப்பானது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளது. மேலும், அன்னார் விதிமுறைகளை மிகவும் பேணக் கூடியவராக இருந்தார்கள்; மேலும் அன்னாரின் தலைமைத்துவம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது என்று அந்த அமைப்பு எழுதியுள்ளது.

எனது வெற்றிகளின் மையம் என்பது மார்க்கத்துடனான தொடர்பும், அஹ்மதிய்யா கிலாஃபத்துடனான தொடர்பும் ஆகும். ஒரு பரிவான கணவர், தந்தையாக இருந்தார்கள். மேலும் குடும்பத்தினருக்கு ஈமான், கட்டுப்பாடு, பரிவு ஆகியவற்றின் அடையாளமாக இருந்தார்கள். ரமலானில் பலமுறை திருக்குர்ஆனை படித்து முடித்து வந்தார்கள்.குடும்பத்தினருக்கு எப்போதும் இறை வணக்கத்தின் பக்கம் கவனமூட்டுவார்கள். அன்னாரின் இயல்பில் எங்கு உயர்தரமான தலைமைத்துவத்திற்கான ஆற்றல் இருந்ததோ அங்கு பணிவும் இருந்தது. மேலும், மிகவும் நேர்மையுடன் தொண்டாற்றி வந்தார்கள். அன்னாரின் மூத்த சகோதரர் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள் அதன் பிறகு அன்னாருடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் தோன்றி விட்டது. அன்னாரின் சகோதரர் அபூ பக்ர் ஸயீத் எழுதுகின்றார்கள்:

அன்னாரின் தந்தையார் ஸால்ட் போலண்டில் உள்ள மிஷனரி பயிற்சி கல்லூரிக்கு அன்னாரை அனுப்பினார்கள். அங்கு அவர்கள் கல்வி பயிறன்றார்கள். பின்னர் உள்ளூர் மிஷினரி ஆனார்கள். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம் அடைந்து அடைந்து அன்னார் தமது துறையில் ஜமாஅத் அளவிலும், அரசாங்க ரீதியிலும் சிறந்த அந்தஸ்தை அடைந்து விட்டார்கள்.

நான் கானாவில் தங்கியிருந்தபோது என்னுடன் அவருக்கு மிக நெருங்கிய தொடர்பு இருந்தது. நட்பு ரீதியிலான நல்ல தொடர்பு இருந்தது. மிகவும் நேசம் மிக்க தொடர்பு இருந்தது. மேலும் என்னவெல்லாம் முக்கியமான பணிகள் இருந்தனவோ, மேலும் எந்த பணிகளில் நம்பிக்கை அவசியமானதாக இருந்ததோ அவற்றை நான் அன்னாரைக் கொண்டே செய்ய வைத்து வந்தேன். மிகவும் நம்பிக்கைக்குரிய நபராக இருந்தார்கள். மேலும் கிலாஃபத்திற்கு பிறகோ அன்னாருக்கு என்னுடன் எப்படிப்பட்ட தொடர்பு இருந்தது என்றால், அது தூய்மையின் உயர்தரத்தை தொட்டுக் கொண்டிருந்தது. ஜமாஅத் மற்றும் கிலாஃபத்திற்காக மிகவும் தன்மானம் கொண்ட நபராக இருந்தார்கள்.

அன்னாரின் தாயார் கூறுகின்றார்கள்: எனக்கு மிகவும் கட்டுப்பட்ட மகனாக இருந்தார்; குழந்தைப் பருவம் முதலே எப்போதும் என்னை பராமரித்து வந்தார்; மேலும் ஹஜ் செய்வதற்கு நான் எண்ணம் தான் கொண்டிருந்தேன். ஆனால், அதற்கு முன்னரே நீங்கள் ஹஜ் செய்யுங்கள் என்று அவர் கூறினார்.

தாயாரை முதலில் ஹஜ் செய்ய வைத்தார்கள். பின்னர் தான் ஹஜ் செய்ய சென்றார்கள்.

கூறுகின்றார்கள்: ஒருபோதும் என்னை தனியாக விட்டதில்லை. எப்போதும் தன்னுடன் வைத்திருந்தார்.

துணைவியார் கூறுகின்றார்கள்: அன்பு செலுத்தக் கூடிய மற்றும் பொறுப்பு மிக்க கணவராக இருந்தார்கள். பிள்ளைகளுக்கு பரிவு மிக்க தந்தையாக இருந்தார்கள். மேலும், ஜமாஅத்திற்காக தியாகங்கள் செய்ய வேண்டும் என்றே எப்போதும் அறிவுரை செய்து வந்தார்கள்.

அன்னாருடைய மகன் எழுதுகின்றார்கள்: எப்போதும் எங்களது ஈமானையும், அஹ்மதிய்யத்தையும் வலிமையான அடித்தளத்தில் நிலை நிறுத்தினார்கள். மார்க்கத்துடன் தொடர்பின் முக்கியத்துவத்தை அன்னார் கற்றுக் கொடுத்தார்கள். மேலும், ஒவ்வோர் அடியிலும் எங்களுக்கு வழிகாட்டினார்கள். மேலும், கூறுகின்றார்கள்:

அன்னாரின் ஈமான் எங்களது முழு குடும்பத்திற்கும் ஒளிவிளக்காகும். ஃபஜ்ர் மற்றும் தஹஜ்ஜுத் தொழுகைக்காகவும் எங்களை எழுப்புவார்கள். மேலும் ரமலானிலோ குறிப்பாக இந்த விஷயத்தை கருத்தில் கொள்வார்கள். ஒவ்வொரு திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமை அன்றும் நோன்பு நோற்பார்கள்.

கூறுகின்றார்கள்: அன்னாரின் உள்ளம் விசாலனமானதாகவும், பணிவால் நிறைந்ததாகவும் இருந்தது. ஒவ்வொரு நபருடனும் கண்ணியத்துடன் நடப்பார்கள். மேலும் அவர் வேலைக்காரராக இருந்தாலும் சரியே! மிகவும் சிரித்து மகிழ்ந்து பழகக் கூடிய மனிதராக இருந்தார்கள்.

அன்னாரின் சகோதரர் ஸயீத் பின் அபூ பக்ர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்:

தந்தையாரின் மரணத்திற்குப் பிறகு அன்னார் என்னை வழிநடத்தினார்கள். மேலும், ஓர் உண்மையான தந்தையைப் போன்று அன்னார் என்னை பராமரித்தார்கள். என்னை கருத்தில் கொண்டார்கள். எனக்கு தர்பிய்யத் வழங்கினார்கள். தொழுகைகளின் பக்கம் கவனமூட்டினார்கள். எல்லா வகையிலும் எனது தேவைகளை பூர்த்தி செய்தார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! மேலும் அவர்களின் பிள்ளைகளுக்கும் அவர்களைப் போன்ற பற்று மிக்க அடையாளங்களிலும், நன்மைகளிலும் முன்னேறக் கூடியவர்களாக ஆக்குவானாக!

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *




12-ம் பக்கத் தொடர்ச்சி...(குத்பா பேருரை

மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்காக தமது செல்வத்தை செலவிடுவதில் ஈடுபடுகின்றார்.

அடுத்து, மனித பிறப்பின் நான்காவது படித்தரமாக அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான். அதாவது உறைந்த இரத்தமானது ஒரு சதையின் வடிவத்தை மேற்கொண்டு விடுகின்றது. அதாவது இரத்தத்தின் கட்டிகளில் மாறிவிடுகின்றது. அதில் காணப்படும் அசுத்தமானது இதிலிருந்து விலகிவிடுகின்றது. இதற்கெதிரில், .

وَالَّذِيْنَ هُمْ لِفُرُوْجِهِمْ حٰفِظُوْنَ

என்ற நிலை வைக்கப்பட்டுள்ளது. அதாவது, அவர் தமது அனைத்து துவாரங்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு விடுகின்றார். மேலும், அவரது இருப்பு தற்போது ஒரு நிரந்தரமான இருப்பாக ஆகிவிடுகின்றது. அது அசுத்தத்திலிருந்து தம்மைத் தாமே தமது எண்ணத்திலிருந்து பாதுகாக்கின்றது. பின்னர் ஐந்தாவது படித்தரம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

அதாவது, சதைக்குப் பிறகு எலும்பு உடலில் உருவாக தொடங்கி விடுகின்றது. இதற்கெதிரில், ஆன்மிக படித்தரமாக இந்த நிலை கூறப்பட்டுள்ளது: அதாவது, அவர்கள் அமானிதங்களையும், உடன்படிக்கைகளையும் பேணுகின்றார்கள். அதாவது, அவர்களிடம் எப்படிப்பட்ட ஆன்மிக உறுதி உருவாகி விடுகின்றது என்றால், அவர்களிடம் எதிரி ஒருவர் அமானிதங்களை ஒப்படைத்தாலும் சரியே! அல்லது எதிரி சமுதாயத்தைச் சேர்ந்த எவரேனும் அவர்களுடன் உடன்படிக்கை செய்தாலும் சரியே!அவர்கள் அதனை பேணுகின்றனர். எந்த வகையான பேராசையோ அல்லது பலவீனமோ அவர்களிடம் உருவாகுவதில்லை.

ஆக, அவர்கள் சந்தர்ப்பவாதிகளாக செயல்பட மாட்டார்கள் என்பதை ஒவ்வொரு நபரும் அறிந்திருக்கின்றார். இன்னும் கூறப்போனால், கொடுத்த வாக்கில் அவர்கள் உறுதியாக இருப்பார்கள். பௌதீக படைப்பின் ஆறாவது படித்தரமாக இந்த நிலை எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

அதாவது, அவர்கள் தமது மற்றும் தமது சமுதாயத்தின் தொழுகைகளை பாதுகாத்துக் கொண்டிருக்கின்றனர். அதாவது, எவ்வாறு தோல் உருவாகி விட்ட பிறகு, குழந்தை பெரும்பாலும் வீணாகுவதிலிருந்து பாதுகாப்பு பெற்று விடுகின்றதோ அதேபோன்று, இறை வணக்கத்தில் தமது சமுதாயத்தை நிலைநிறுத்தக் கூடியவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அவர்கள் தம்மளவில் மட்டும் பாதுகாப்பை அடைந்து விடவில்லை. மாறாக தமது சமுதாய ரீதியிலும் பாதுகாப்பு பெற்று விடுகின்றனர். மேலும் சமுதாயம் நல்லவர்களாக ஆகிவிட்டதன் காரணமாக அவர்கள் வெளிப்புற தாக்கத்திலிருந்தும் எவ்வாறு தோல் உடைய மனிதன் வெளிப்புற தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெற்றுவிடுகின்றானோ அதேபோன்று அவர்களும் வெளிப்புறத் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெற்று விடுகின்றனர். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 138-139, காதியான் பதிப்பு, 2010-ம் ஆண்டு)

* * * * * * * *



## ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின்

## அமெரிக்க சுற்றுப் பயணம் - 2013

**நான் இந்த பள்ளிவாசலை திறந்து வைக்கும் நேரத்தில் இந்த பள்ளிவாசல் அனைத்து மக்களின் பார்வையிலும் அவர்கள் அஹ்மதிகளாக இருந்தாலும் அல்லது அஹ்மதி அல்லாதவர்களாக இருந்தாலும் அல்லது முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் அமைதி மற்றும் சகோதரத்துவத்தை பரப்புவதற்கான காரணியாக நிரூபணமாகும்**

**அனைத்து மத மக்களுக்கும் நம்முடைய இந்த பள்ளிவாசலின் கதவுகள் திறந்து இருக்கும். இந்த பள்ளிவாசல் மனிதகுலத்திற்கு இறைவனுடைய அருட்கொடை வெளிப்படுவதற்கு காரணியாக இருக்கிறது**

**அனைத்து மதங்களை சேர்ந்த நம்பிக்கை கொண்ட மக்களும் மேலும், மத நம்பிக்கை இல்லாத மக்களும் ஒன்றுபட வேண்டிய அவசியம் இன்று உலகிற்கு இருக்கிறது. அனைத்து இனங்கள் மற்றும் சந்ததிகளின் ஒட்டு மொத்த நலனிற்காக இந்த உலகை அழிவிலிருந்து காக்க ஒன்றுபடுவது மிக மிகத் தேவையாக இருக்கிறது**

**முழு உலகப் போருக்கான அடையாளங்கள் தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டு இருக்கின்றன.**
**இந்தப் போரின் அழிவிலிருந்தும் தீய விளைவுகளில் இருந்தும் தப்பிக்க ஒரே வழிதான் இருக்கிறது. அது அந்த ஏக இறைவனிடம் மன்றாடுதலாகும்**
**அவன் தன்னுடைய படைப்பினங்களின் மீது கருணை உள்ளவன் ஆவான். உலகம் அந்த இறைவனிடம் குனிந்து விட வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை ஆகும்**

**வான்கூவர் பிரிட்டிஷ் கொலம்பியாவில் மஸ்ஜித் பைத்துர் ரஹ்மான் திறப்பு விழா நிகழ்ச்சியில் ஹுஸூர் அவர்களின் சிறப்புரை**

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

## (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் வான்கூவர் கனடாவில் மேற்கொண்ட பணிகளின் சுருக்கமான அறிக்கை

**அறிக்கை தயாரிப்பு - அப்துல் மாஜித் ஸாஹிப் தாஹிர்**
**(அடிஷனல் வகீலுத் தப்ஷீர், லண்டன்)**

**மே 18,2013**
**பைத்துர் ரஹ்மான் திறப்பு விழாவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய உரை. டெல்டா, (பிரிட்டிஷ், கொலம்பியா)**

தஷஹ்ஹுத் தவூத் மற்றும் தஸ்மியாவிற்குப் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

கண்ணியத்திற்குரிய விருந்தினர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்தஹு!

உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும், சமாதானமும் அருள்களும் உண்டாகட்டுமாக!

எல்லாவற்றிற்கும் முதலாக உங்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். ஏனெனில் நீங்கள் எங்களுடைய அழைப்பை ஏற்று கலந்து கொண்டுள்ளீர்கள்.

மேலும் வான்கூவர் பள்ளித் திறப்பு விழாவில் எங்களுடன் கலந்து கொண்டீர்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

உலகத் தொடர்புகளை கருத்தில் கொண்டு மற்றவர்களை மக்கள் தங்களுடைய சமுதாய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுக்கின்றனர். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் அழைக்கும்போது கலந்து கொள்ளாமல் இருப்பது ஏதாவது குறிப்பான காரணம் இருந்தால் மட்டுமே கலந்து கொள்வதில்லை. மற்றபடி பொதுவாக மக்கள் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்கிறார்கள்.

அனைத்து சமுதாயங்களுடனும், இனத்தினருடனும் மார்க்கத்தினருடனும் தொடர்பு வைத்துள்ள மக்களுக்கு இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது என்பது அன்றாட வழக்கமாகும். எனினும், முஸ்லிம் அல்லாத மக்களுக்கு ஒரு மார்க்க மற்றும் இஸ்லாமிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வது என்பது அவர்களிடம் உள்ள சகிப்புத்தன்மைக்கான ஒரு தெளிவான ஆதாரமாகும்.

மேலும் அவர்கள் மற்றவர்களைப் பற்றி அறிந்து கொள்ள அவர்களுடன் நட்பு கொள்ள வேண்டும் என்ற உளக் கிடக்கையை வெளிப்படுத்துகிறது.

இங்கு நாம் அனைவரும் பள்ளிவாசல் திறப்பு விழாவிற்காக ஒன்றுகூடியுள்ளோம். இது இந்த மாநிலத்தின் முதல் பள்ளிவாசல் ஆகும். ஒரு முக்கிய நோக்கத்திற்காக இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டு உள்ளது. மேலும், இதற்கான திறப்பு விழா நம்முடைய மகிழ்ச்சிக்கும், சந்தோஷத்திற்கும் காரணமாக அமைந்து உள்ளது.நீங்கள் அனைவரும் இங்கு வ்நதது எங்களுடைய மகிழ்ச்சியில் பங்கு கொண்டது என்பது எங்களை அதிக அளவில் நன்றி செலுத்த வைக்கிறது. இதற்கு மாறாக, நீங்கள் மதம் அல்லாத நிகழ்ச்சிகள் அல்லது உங்களுடைய சமுதாய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருப்பீர்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்)அவர்கள் கூறினார்கள்:

இந்தப் பகுதியில் பள்ளிவாசல் கட்டியதன் மூலம் இங்குள்ள மக்களுடனான தொடர்பில் முன்னேற்றம் ஏற்படும் என்று நான் நம்புகிறேன். மேலும் அது என்னுடைய பிரார்த்தனையாகவும் இருக்கிறது.

மேலும், இஸ்லாத்தைப் பற்றி




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india



Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 28 AUG 2025 Issue No.35

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அச்சமடைந்துள்ள முஸ்லிம் அல்லாதவர்களின் பயம் இதன் காரணமாக நீங்கிவிடும் என்று நான் நம்புகிறேன். மேலும், பிரார்த்தனை செய்கிறேன். மேலும் நீங்கள் அனைவரும் எங்களுடைய மார்க்கத்தைப் பற்றிய உண்மை நிலையையும் அதனுடைய அழகிய வடிவத்தையும் காண்பீர்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

நான் சில சொற்களைக் கொண்டு பள்ளிவாசல் (மஸ்ஜித்) என்பதன் பொருளையும், நோக்கத்தையும் கூற விரும்புகிறேன். மஸ்ஜித் என்பது ஓர் அரபிச் சொல்லாகும். இதனை ஆங்கிலச் சொல்லான Mosque என்ற சொல்லுடன் மொழியாக்கம் செய்யப்படுகிறது.ஆனால், "Mosque' என்ற ஆங்கிலச் சொல் மஸ்ஜித் என்ற அரபிச் சொல்லின் உடைய பொருள் மற்றும் நோக்கத்தை சரியாக எடுத்துரைப்பது கிடையாது. எனவே தான் “மஸ்ஜித்” உடைய உண்மையான பொருளைக் கூற விரும்புகிறேன். மஸ்ஜித் என்ற சொல்லின் உண்மையான பொருள் இறைவனை வணங்குவதற்கான இடம் என்பதாகும். அதாவது எங்கு மக்கள் இறைவனுக்கு முன்னால் சிரம்பணிதலில் இருக்கின்றார்களோ அப்படிப்பட்ட இடத்திற்குரிய பெயராகும். அனைத்து மஸ்ஜித்களும் இறைவனுக்குரியதாகும் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். அதாவது அவனுக்கு சொந்தமானதாக இருக்கிறது. சந்தேகமின்றி அனைத்து மஸ்ஜித்களும் வெளிப்படையில் மனிதனின் மூலமாக கட்டப்படுகின்றன.ஆனால், ஓர் உண்மையான மஸ்ஜித் அதாவது முற்றிலும் இறைவனுக்காக மட்டுமே கட்டப்பட்ட மஸ்ஜிதுடைய அனைத்து கதவுகளும் எவர்கள் அமைதி மற்றும் நிம்மதிக்கான உத்திரவாதத்தை வழங்குகிறார்களோ மேலும் அந்தப் மஸ்ஜித்களில் வல்லமை மிக்க ஏக இறைவனை வணங்குவதற்காக வர விரும்புகிறார்களோ அத்தகைய மக்கள் அனைவருக்காகவும் திறந்தே இருக்கும்.

அவர்களுக்கு இந்தப் பள்ளிவாசல் கதவுகள் திறந்தே இருக்கின்றன. இதற்கான செயலளவிலான உதாரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் காணமுடிகிறது.

ஒருமுறை நஜ்ரானிலிருந்து கிறிஸ்தவர்களின் குழு மதீனாவிற்கு வந்தது. அவர்களின் வணக்க வழிப்பாட்டிற்கான நேரம் வந்தபோது, அவர்கள் பதற்றத்துடன் வணக்க வழிபாட்டிற்காக ஓர் இடத்தை தேடி ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் நிம்மதியற்ற நிலையைக் கண்டு கவலையடையத் தேவையில்லை . நீங்கள் மதீனாவிலேயே எங்களுடைய பள்ளிவாசலிலேயே வணக்க வழிப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று கூறினார்கள்.ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இன்றைய காலகட்டத்தில் முஸ்லிம் அல்லாத மக்களின் ஒரு பெரும் பகுதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மாற்று மதத்தினருடன் கடுமையான நடைமுறையை மேற்கொண்டார்கள் என்று ஆட்சேபனை செய்கிறது. இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனர் மீது வதந்தி பரப்பப்பட்டு உள்ளது.

ஒருபுறம் இஸ்லாத்தின் எதிரிகள் மதத்தைக் கண்டு அஞ்சும் அதே சமயத்தில் இஸ்லாத்தின் தோற்றுனர் மீது தாக்குதல் செய்ய எல்லையில்லாத மற்றும் முட்டாள்தனமான மற்றும் பொய்யான வெறுப்பையூட்டும் ஆட்சேபனைகளை செய்கின்றார்கள்.

உண்மையான வரலாறு தெரியாததால் அவர்கள் அனைவரும் இதனை செய்கிறார்கள்.

அவர்களுக்கு உண்மையான இஸ்லாம் மற்றும் கறைபடியாத போதனைகள் பற்றித் தெரியாமல் இருப்பதே அதற்கான காரணம் ஆகும். முஸ்லிம்களில் சில பிரிவினரின் கொடூரமான செயல்களின் விளைவே இத்தகைய வெறுப்பிற்கும் மற்றும் கவலைக்குரிய நிலைமைகளுக்கும் காரணமாக அமைந்தன என்பதில் சிறிதும் சந்தேகம் கிடையாது. பெயர் தாங்கி முஸ்லிம்கள் உண்மையான போதனைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்வை விட்டும் மிகத் தொலைவில் சென்று விட்டார்கள். இதன் காரணமாகவே அவர்கள் இத்தகைய செயல்களை செய்து வருகிறார்கள். நஜ்ரானிலிருந்து வந்த கிறிஸ்தவ குழுவினருக்கு செய்யப்பட்ட ஏற்பாடு மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணை உள்ளத்தின் உதாரணத்தை நான் எடுத்து வைத்து உள்ளேன். நான் இப்போது உங்களுக்கு முன்னால் அமைதிக்கான திருக்குர்ஆனின் போதனையை எடுத்து வைப்பேன்.

சூரா பக்கராவின் வசனம் 115-ல் இறைவன் கூறுகின்றான்:

அல்லாஹ்வின் பள்ளிகளில் அவனுடைய பெயர் கூறப்படுவதைத் தடுத்து, அவற்றைப் பாழாக்க முயல்பவனை விட மிகப் பெரிய அநியாயக்காரன் எவன்? (2:115)

ஓர் உண்மையான மஸ்ஜிதுடைய வாசல்கள் இறைவணக்கம் செய்ய விரும்புகின்ற மக்களுக்காக எப்போதும் திறந்திருக்கும் என்பது தெளிவான ஒரு கட்டளையாகும். எனவே ஓர் உண்மையான நம்பிக்கையாளர் எவரையும் இறைவனை வணங்குவதிலிருந்து தடுக்கின்ற அளவிலான அநீதியை ஒருபோதும் செய்ய முடியாது. இஸ்லாத்தின் மகத்தான போதனைகளை ஆய்வு செய்தால் பின்னர் அதன் பல்வேறு அம்சங்களிலிருந்து எப்போதும் ஒளியும், பிரகாசமுமே வெளிப்படும். இஸ்லாத்தின் அசல் மற்றும் அழகிய போதனைகளை அறிந்திராத மக்களுக்கு நான் இஸ்லாமிய போதனைகளை அறிமுகம் செய்யும்போது அவர்கள் உண்மையை அறிந்து ஆச்சரியத்தில் உறைந்து விடுகின்றனர். நான் ஏற்கனவே கூறியது போன்று, துரதிஷ்டவசமாக, முஸ்லிம்களின் ஒரு கூட்டம் எத்தகையதாக இருக்கின்றது என்றால் அது தங்களது ஒன்றுபட்ட தவறான அமல்களின் காரணமாக இஸ்லாத்தின் மகத்துவம், மற்றும் அழகை பரப்புவதற்கு பகரமாக அது தொடர்பாக சந்தேகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்; மேலும் அவர்கள் செய்பவை எல்லாம் வெட்கத்திற்குரியவையாகும் என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை. இஸ்லாமியப் போதனைகளிலோ அன்பும், நேசமும், அமைதியும் இருக்கின்றது. இது வெறும் சொற்கள் அல்ல. மாறாக, ஓர் உண்மைத்துவம் ஆகும். எந்த மக்கள் தமது தீய செயல்களின் மூலமாக இஸ்லாத்தின் பெயரை கெடுக்கின்றனரோ அவர்கள் சுயநலன்கள் மற்றும் சுயநோக்கங்களுக்காக மட்டுமே அவ்வாறு செய்கின்றனர். தீவிரவாதத்துடனும், பயங்கரவாதத்துடனும் இஸ்லாத்திற்கு உறுதியாக எந்த தொடர்பும் இல்லை.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எங்கெல்லாம் திருக்குர்ஆனில் கடுமைக்கான போதனை வழங்கப்பட்டுள்ளதோ அதற்கான அவசியமும், காரணங்களும் கூட விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுவிட்டன. எங்கெல்லாம் அப்படிப்பட்ட கட்டளைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ அவை உலகில் நிரந்தரமான அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிமுறைகளாக மட்டுமே அமைந்துள்ளன. (இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.....)

தமிழாக்கம்
முஅல்லிம்
வாலாஜா D. ஷாஜஹான்

* * * * * * * *

**National Watch Company**

Sales & Service



B. Mohamed Adil
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad